Registered as a news paper. 15 AUG 2004 பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்



- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]


(சி/2494)



மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 27 (15.08.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:317


# அரசாங்கத்தின் மாற்றுத் திட்டம் விடுதலைப் புலிகள் நிராகரிப்பு!

## பேச்சுக்களை குழப்பும் நடவடிக்கை என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு!





(கிளிநொச்சி)

**ஜனாதிபதி சந்திரிகாவால் முன்வைக்கப்படவுள்ள எந்தவொரு தீர்வு யோசனையையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதன் அடிப்படையில் பேசப்போவதாக அரசாங்கம் கூறிக்கொள்வது சமாதானப் பேச்சுக்களை குழப்புகின்ற ஒரு நடவடிக்கை யாகவே அமையும்.**

**தமிழர் தரப்பின் சார்பில் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் எந்தநேரத்திலும் பேச்சு நடத்தத் தயாராகவே இருக்கின்றோம் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

நேற்று கிளிநொச்சி சமாதான செயலகத்தில் ஜப்பானியத் தூதுவர் அகியோ சுட்டாவைச் சந்தித்தபின்னர் செய்தி யாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் எங்க ளுக்குச் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக வரைபுகள் எல் லாமே எமது மக்களின் அபிலாஷைகள் எதையுமே உள் வாங்கிக் கொள்ளவில்லை என்ற அடிப்படையில் தான், சர்வதேச சமூகமும் - இலங்கை அரசாங்கங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசனை வரைபை எதிர் பார்த்திருந்தன.

கடந்த காலங்களில் முன்வைத்த அவர்களின் வரைபு களில் உள்ள குறைபாடுகளை நீக்கி,

எங்களுடைய மக்களின் அபிலாஷைகளையும் தேவை களையும் புரிந்துகொண்டு ஒரு ஆக்கபூர்வமான - நடை முறைச்சாத்தியமான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்ற வரைபை நாங்கள் முன்வைத்திருக்கிறோம்.

ஆகவே, சர்வதேச சமூகமும் இலங்கை அரசாங்கமும் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தான் - நாங்கள்


(12 ஆம் பக்கம் பார்க்க)


## வன்னியில் நிர்வாகத் திறமை; ஜப்பானியத் தூதுவர் பாராட்டு

வன்னியிலுள்ள நிர்வாகத் திறமை தனக்கு வெகுவாகப் பிடித்திருப்பதாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகியோ சுட்டா தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சு நடத்தியபின்னர் செய்தியாளரிடம் பேசும்போதே (12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலையை அரசு மீண்டும் அதிகரித்தது!

எரிபொருட்களின் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் அதிகரிக்கப்பட்டிருப் பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கமைய ஒரு லீற்றர் டீசலின் விலை 4 ரூபாவாலும், பெற்றோலின் விலை 3 ரூபாவாலும், அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 32 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 36 ரூபாவாக அதிகரிக்கும். 37 ரூபா 30 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் சுப்பர் டீச லின் விலை 41 ரூபா 30 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

65 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 68 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் மண்ணெண்ணை விலையில் மாற்றம் ஏற்படாது என தெரிவிக்கப்படுகிறது.

## சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இரு தரப்பிடமும் ஜப்பான் கோரிக்கை!

(கிளிநொச்சி)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே, ஜப்பான் மற்றும் சர்வதேச நாடுகள் உறுதியளித்த உதவிகளை வழங்குமாகையால் எந்தவித தாமதமும் இல்லாமல் இரு பகுதியினரும் சமாதான் முயற்சியை மீள ஆரம்பிக்க வேண்டுமென இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகியோ சுட்டா அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த ஜப்பானியத் தூதுவர் சமாதான செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப் பாளர்சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

தூதுவரின் இந்தக் கருத்திற்குப் பதிலளித்த அரசியற் துறைப் பொறுப்பாளர் -


(12 ஆம் பக்கம் பார்க்க)


## பேச்சுக்களை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வெளிநாடுகள் அழுத்தம்!

(கொழும்பு)

தேக்கநிலையில் காணப்படும் சமாதானப் பேச்சுக்களை - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து முன் னெடுத்துச் செல்லுமாறு - வெளிநாட்டு இராஜ தந்திரிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் நோர்வே ஆகிய நாடுகளின் இராஜதந்திரி களே ஜனாதிபதிக்கு இந்த அழுத்தத்தைக் கொடுத்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை இன்று

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை இன்று நாடளாவிய ரீதியில் 2606 பரீட்சை நிலையங்களில் நடை பெறவுள்ளது.

மொத்தமாக 3 இலட்சத்து 6 ஆயிரத்து 107 மாணவர்கள் இந்தப் பரீட்சையில் இதில் 66 ஆயிரத்து 846 பேர் தமிழ் மொழி மூல பரீட்சாத்திகளாவர்.

இதேவேளை, பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் டிசம்பர் மாத்தில் வெளியாகவுள்ளதாக பரீட்சை திணைக் களம் அறிவித்துள்ளது. (01)

## மட்டக்களப்பில் படுகொலைகள்; பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களை அடுத்து மாவட்டத்தின் பாது காப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் தீவிர சோதனை நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரம் உட்பட அதனைச் சூழவுள்ள பகுதி களிலும் - பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் ஆகியோர் இணைந்து விசேட பாதுகாப்பு நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகரம், புதுப்பாலம், கல்லடி, பெற்றோலியச் சந்தி உட்பட முக்கிய கேந்திர நிலையங்களில் பொலிஸார் தீவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வாகனங்கள் நிறுத்தப்பட்டு - பயணிகள், பொதிகள் இறக்கப்பட்டு தீவரசோதனைகள் சில இடங்களில் படையின ரும் பொலிஸாரும் கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வாழைச்சேனை நகரில் நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் இளைஞர் ஒருவர் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். (12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் பிரதித் தூதுவர் தமிழ்ச் செல்வனுடன் பேச்சு!



கடந்த நவம்பர் மாதம் எம்மால் சமர்ப் பிக்கப்பட்ட இடைக் காலத் தன்னாட்சி அதி காரசபையின் அடிப் படையில் நாம் பேச்சுக் களை மீள ஆரம்பிப் பதற்குத் தயாராகவே உள்ளோம்.

சமாதானப் பேச்சுக் களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதிலை அனுசரணை யாளர்கள் மூலம் எதிர்பார்த்துள்ளோம்.

இவ்வாறு கிளிநொச்சிக்கு நேற்று வந்த இலங்கைக்கான நோர்வேயின் பிரதித்தூதுவர் ஒட்வர் லீகிறெட்டியிடம் அர சியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித் தார்.

இவரது இந்த விஜயத்தின் நோக்கம் தடைப்பட்டுப் போ[illegible]ுள்ள சமாதானப் பேச்சுக்களை (12ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகள்

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகளினை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. பங்குபற்றுபவர்கள் கீழ்வரும் தலைப்புகளின் கீழ் தமது ஆக்கங்களினை 15.09.2004 இற்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கட்டுரை : பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 700 - 800 சொற்களுக்குக் குறையாது எழுதப்படல் வேண்டும்.

1. கண்ணிவெடி நடவடிக்கையில் (Mine action) ஈடுபடும் நிறுவனங்களின் சமூகத்திற்கான பங்களிப்பு
2. எமது சமூகத்தில் கண்ணிவெடி அபாயக்கல்வியின் முக்கியத்துவம்
3. கண்ணிவெடி கற்ற எதிர்காலத்தை உருவாக்க மக்களின் பங்களிப்பு

**பரிசு விபரம் கட்டுரை**

1 ஆம் பரிசு 6500/=
2 ஆம் பரிசு 3500/=
3 ஆம் பரிசு 2500/=
இரு ஆறுதல் பரிசுகள் தலா 750/=

சித்திரம : "கண்ணிவெடிகளில் இருந்து எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்போம்" எனும் கருப்பொருளினை வெளிப்படுத்த வேண்டும்.

**பரிசு விபரம்**

1 ஆம் பரிசு 7500/=
2 ஆம் பரிசு 5000/=
3 ஆம் பரிசு 3000/=
இரு ஆறுதல் பரிசுகள் தலா 750/=

**போட்டி நிபந்தனைகள்:**

1. வெண்புறா நிறுவன ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்துகொள்ள இயலாது.
2. யாழ்.மாவட்டத்தில் வசிக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
3. கட்டுரை: கட்டுரை A4 தாளில் எழுதப்படவேண்டும். தாளில் ஒரு பக்கத்தினை மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். கட்டுரை தெளிவான கையெழுத்தில் இருத்தல் வேண்டும். தட்டச்சில் பொறித்தும் அனுப்பப்படலாம்.
4. சித்திரம்: கருப்பொருளினை வெளிப்படுத்தக்கூடிய சுலோகங்கள் பயன்படுத்த வேண்டும். சுலோகங்கள் 4 இற்கு மேற்படாதவையாக அமைதல் வேண்டும். அளவுத்திட்டம் 18" X 12" (Drawing Paper) என அமையவேண்டும். சித்திரங்களும், சுலோகங்களும் புத்தாக்கமாக இருத்தல் வேண்டும். வர்ண பிரயோகம் - நீர் வர்ணம் மட்டும் பாவிக்கவேண்டும். கண்ணிவெடி, வெடிக்காத, வெடிநிலையில் உள்ள வெடிபொருட்கள் என்பவற்றைக் கையாளுதல் போன்ற சித்திரம் தவிர்க்கப்படவேண்டும். தெரிவு செய்யப்படும் சித்திரங்கள் கண்ணிவெடி தகவல் பலகைக்கு (MRE Bill Board) பயன்படுத்தப்படும்.
5. பங்குபற்றுபவர்கள் தமது ஆக்கத்துடன் தமது பெயர், விலாசம், தொழில், தொலைபேசி இல, அடையாள அட்டை இல. போன்ற விபரங்களினை அனுப்புதல் வேண்டும்.
6. போட்டியின் முடிவுத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.
7. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. இறுதி முடிவுகள் பற்றிய விபரங்கள் பத்திரிகை மூலமாக அறிவிக்கப்படும்.

ஆக்கங்கள் நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பப்படலாம். மேலதிக விபரங்கள் தேவையாயின் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்,**
இல.63, பலாலிவீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.021 - 222 - 5932

(சி-2936)


# 30 ஆவது ஆண்டு நிறைவும் விளையாட்டுப் போட்டியும்

(நெல்லியடி)

கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டுப் போட்டியும் இன்று பிற்பகல் 2 மணிக்கு தீபஜோதி விளையாட்டுக் கழக மைதானத்தில், நிலையத்தின் தலைவர் யோ.சுரேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா, வடமராட்சி கோட்ட மகளிர் பொறுப்பாளர் வ.வர்ணா, வடமராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் வே.தமிழரசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (12)

## 31 ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் 31 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு தும்பளை கணக்கிலாவத்தை மைதானத்தில் நாவலர் விளையாட்டுக்கழகத் தலைவர் எஸ்.பி. விவேகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (14)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணத்தின் சமகால ஓவியமும், ஓவிய வரலாறும் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு கந்தர் மடத்திலுள்ள பிரெஞ் நட்புறவுக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

## சிறுவிளம்பரம்

### சேவை

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல விண்ணப்பிக்கும் உங்களுக்கு, ஆவணங்கள் சரிபார்த்துக் கொடுக்கப்படும், விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும், ஆலோசனைகள் வழங்கப்படும், அத்துடன் உலகின் எந்தப் பாகத்துக்கும் குறைந்த விலையில் விமான ரிக்கட்டுகள், பொதிசேவைகள், தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கவும். திருமதி ரேலங்கி செல்வராஜா, No.344 காலி வீதி, கொழும்பு - 04. T.P-011 2504665.


**நிறைஞ்சனாஸ்** சங்கானை
அர்ஜுன், ரேவதி, நடித்த
**சுபாஷ்**
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ROAD TRIP
(சி-2723)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த


16ஆம் திகதி முதல் லேசா லேசா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
கமல், சினேகா, பிரபு நடித்த


ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2725)



# பணிநிலை வேண்டுகை

அரசியல்துறை நிதிப்பிரிவில் கீழ் குறிக்கப்படும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றது. தகுதியுடைய ஆண், பெண் இருபாலரிடமுமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

பணிநிலைகள்:-

01. உதவிக் கணக்காய்வாளர்
02. கணக்காய்வு எழுதுநர்
03. கணக்கு எழுதுநர்

தகைமைகள்:-

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை அல்லது முகாமைத்துவப் பட்டம்.
02. க.பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் வேண்டிய படங்களல் சித்தியடைந்திருத்தல்.

அகவை எல்லை:-
18 அகவைக்கு உட்படாமலும் 40 அகவைக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஊதியம்:-
ஊதிய அளவுத்திட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும்

வேண்டுகை கடித உறையில் எழுதப்படவேண்டிய முகவரி:
பொறுப்பாளர், ஆளணிப்பகுதி, நிதிப்பிரிவு, அரசியல்துறை தமிழீழம்.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 31.08.2004

வேண்டுகைகள் சேர்ப்பிக்கப்படவேண்டிய முகவரிகள்:

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | அரசியல்துறை மாவட்டச் செயலகம் பொற்பதி வீதி, கொக்குவில். |
| புதுக்குடியிருப்பு | - | திரைப்பட வெளியீட்டுப்பிரிவுத் தொடர்பகம். |
| மல்லாவி | - | மின்வழங்கல் சேவை நிறுவனம். |
| கிளிநொச்சி | - | விளம்பரப் பணிமனை, ஈழநாதம் , யாழ்.சாலை, கிளிநொச்சி. |
| பொது அஞ்சல் | - | மக்கள் தொடர்பகம் அரசியல்துறை , பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி. |

(சி-2806)



இதோ யாழ்.மக்களுக்கோர் புத்துணர்வூட்டும் புதுப்பொலிவுடன் திகழும்

**பவர் செலுலர் ரேடிங் கம்பனி**

நிறுவனத்தினர்

இப்பொழுது வடமராட்சி மக்களுக்காகத் தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கப்பெற்று, மிகத்துல்லியமான முறையில் உங்கள் அன்புச் செல்வங்களுடன் பேசி மகிழ இன்றே விரையுங்கள்

**பவர் செலுலர் ரேடிங் கம்பனி**

மேசைத் தொலைபேசி விற்பனையில் முன்னோடியாகத் திகழும்

**பவர் செலுலர் ரேடிங் கம்பனி**

நிறுவனத்தினர்

குறிப்பு : இம்மேசைத் தொலைபேசிகள் யாவும், அன்ரனா இணைப்புகள் மூலமும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு இணைப்புகள் யாவும் 24 மணி நேரத்தில் பெற்றுத்தரப்படும்.

எமது சேவை ஸ்ரீலங்கா ரெலிக்கொமின் துணை நிறுவனமாகிய மொபிட்டல்

**பவர் செலுலர் ரேடிங் கம்பனி**

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்: 205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகில்)
அலுவலக T.P:- 021 - 222 - 7070, 0712 - 399220
Hot Line: - 0777 281521.
(C/2933)



# எரிக்கணேஷ்

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து, நவீனரககண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும்.
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறேலென்ஸ், என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்யவும் மாத்திரை விற்பனைக்குண்டு

**நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்**



**எரிக்கணேஷ்**
மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டும் இடமும்
566,564 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
T.P 222ഉ2486 (C-2755)

கிளை இலஉ91, K.K.S Road, Kokuvil.
கிளை இல.80 K.K.S Road, Chunnakam.

# வரவு - செலவுத்திட்ட அறிக்கைக்கு மக்களின் கருத்து கோரப்படவுள்ளது

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பொருட்டு, பொதுமக்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்டறிவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தீர்மானித்துள்ளது.

இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆளும் கூட்டணியின் தலைவர் நந்தன குணதிலக, மின்சக்தி பிரதி அமைச் சர் மஹிந்தானந்த அலுத்கம, ஜே.பி.வியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, ஜனாதிபதியின் சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குவர்.

வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், தேசிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல், கிராமிய பொருளாதாரத்தை வளர்த்தல், அரச கருமத்தை உயர்த்துதல், பணவிரயத்தைக் குறைத்தல், அரச வருமானம் மற்றும் வரி என்பன தொடர்பாக இந்தக்குழு பொது மக்களிடம் கருத்துக்களைக் கேட்டறியவுள்ளது.

# போர்நிறுத்தம் அமுலான பின்னர் நாடு முழுவதும் 223 பேர் கொலை!

## இராணுவப் பேச்சாளர் தகவல்

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், சுமார் 223 பேர் வரை கொலை செய்யப்பட்டிருப்பதாக படைத்தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

எட்டு மாத காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் மட்டும் 25 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் இத்தகைய கொலைச் சம்பவங்கள் காரணமாக, வீதிச் சோதனைச் சாவடிகளையும், வீதி ரோந்துக்களையும் அதிகரிக்கவேண்டிய கட்டாயம் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சுக்குப் பலதரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# வேலையற்ற பட்டதாரிகள் சகலருக்கும் வேலைவாய்ப்பு !

## ஜனாதிபதி மீண்டும் உறுதிமொழி



வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிச்சயம் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரசாங்கம் உறுதியளித்தவாறு வேலையற்ற பட்டதாரிகள் சகலருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு, இந்தப்பணி நிறைவேற்றப்படும்.

அரசாங்கத்துறையிலும், உற்பத்தித்துறையிலும் பல வெற்றிடங்கள் இருப்பது இனம் காணப்பட்டுள்ளது. வேலையற்ற சகல பட்டதாரிகளும் இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படுவது என்ற அரசாங்கத்தின் திட்டம் குறித்து, பலர் நன்கு அறிந்திருக்கவில்லை என்றும் இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# சமாதானப் பேச்சுக்கு ஆதரவளிக்குமாறு பிரித்தானிய அரசிடம் பிரதமர் கோரிக்கை



இடையில் நின்றுபோயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்குப் பிரித்தானிய அரசின் ஆதரவையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

ஏதென்ஸ் நகரில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பங்குபற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - அந்த விழாவுக்கு வந்திருந்த பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இதேவேளை - பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுத்துறை தொடர்பாக நேற்று முன்தினம் ஏதென்ஸில் நடைபெற்ற மாநாட்டிலும் பிரதமர் கலந்துகொண்டார்.

ஒலிம்பிக் விழா தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காகச் சென்ற, இலங்கை ஊடகவியலாளரைச சந்தித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, தான் பிரித்தானியப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தை நின்றுபோயுள்ளதால், இலங்கையில் இப்பொழுது தோன்றியுள்ள அரசியல் நிலவரம் பற்றிப் பிரித்தானியப் பிரதமரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அத்துடன், இலங்கையில் விளையாட்டுத்துறையை எதிர்வரும் காலத்தில், மேலும் விருத்திசெய்வதற்குப் பிரித்தானிய அரசும், பொதுநலவாய நாடுகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் பிரித்தானியப் பிரதமரும், இளவரசியும் இதன்போது உறுதியளித்தனர்.

ஏதென்ஸ் நகரில் அமைந்துள்ள பிரித்தானியத் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் - இருநாட்டுப் பிரதமர்களுக்குமிடையே நீண்ட நேரப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஒலிம்பிக் விழாவில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்குப் பதிலாக அவரின் வேண்டுகோளின்பேரிலேயே, தான் கலந்துகொண்டதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (தே)

# இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானம்

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகள் தொடர்பாக, சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளில் இந்த வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதையடுத்தே தேர்தல் வாக்களிப்பின்போது, வாக்குச் சாவடிகளில் அடையாள அட்டை, கடவுச்சீட்டு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களைப் பயன்படுத்தி, வாக்காளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதைக் கட்டாயமாக்கும் யோசனைகளைக் கொண்ட உத்தேச சட்டமூலம் ஒன்று சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை - இந்த நடவடிக்கைக்கு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், தேசிய அடையாள அட்டையற்ற மலையகத் தமிழர்களுக்கு, அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் தோற்றுவிக்கப்படும் என்ற நோக்கத்திலேயே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இதற்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

## உள்நாட்டில் சொகுசு ரயில் தயாரிக்கப்படவுள்ளது

இலங்கையில் ரயில் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு முன்னர் இந்தச் சொகுசு ரயில தயாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் ரயில் குறைந்த செலவில் மிகவும் சொகுசு வசதி நிறைந்ததாக அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பேரினவாதம் தமிழரின் பிரதேசங்களில் கால் பதிப்பதில் கவனமாக இருக்கிறது

## அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன்



தமிழ் தேசத்தின் விடுதலைக்கான நகர்வையே எமது தலைவர் மேதகு வே.பிரபாகரன் மேற்கொண்டுள்ளார். எமது பிரதேசங்களில் ஆலயங்களை அமைப்பதும், அதனைக் காப்பதும் மக்களின் கடமையேயென, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் துணை அரசியல் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை அன்று திருமலை மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற திருகோணமலை மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது இயக்கத்தில் போராளிகளுக்குத் தெய்வ சிந்தனைக்குத் தடை இல்லை. இயக்கத்தின் அடையாளங்களுடன், தெய்வ சந்நிதிகளுக்குச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும் என்பதே நடைமுறை.

இதில் தொடர்ந்து பேசிய அவர் சமாதான காலப்பகுதி அபாயகரமான காலப்பகுதியாகவே மாறிவிட்டது. பேரினவாதம் தமிழ் பிரதேசங்களில் தமது கால்களைப் பதிப்பதிலேயே கவனமாக இருக்கின்றது. சிங்களக் குடியேற்றங்கள் வரலாறாக மாற்றப்படுகின்றது. நாம் மதங்களுக்கும், ஆலயங்களுக்கும் எதிரானவர்கள் அல்லர். எம்மை ஆலயங்கள் அமைக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டாம். அது மக்களது பணி.

எமது தாயக மண்ணில் இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள பௌத்தபீடங்கள் இன்னும் 10 வருடங்களில் பாரிய விகாரைகளாகவும், வழிபாட்டுத்தலங்களாகவும், சரித்திர முக்கியத்துவம் பெற்றதாகவும் மாறிவிடும். இராணுவ முகாமைக்காட்டிலும், விகாரைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அமைக்கப்பட்டு வருகின்றது. பிரசித்தி பெற்ற இந்து ஆலயம் அமைந்த பிரதேசத்தில் அதன் மூலஸ்தானத்தைப் பார்த்தவாறு தம்பலகாமத்தில் பௌத்த சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க தமிழ் மக்களது பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதனை அமைக்கும் போது, எமது மக்கள் குரல்கொடுக்க முடியாதவர்களாக இருந்திருக்கின்றார்கள்.

தலைவரின் வேண்டுதலுக்கு அமைவாக 150 பேர் கொண்ட போராளிகள் குழு திருகோணமலை மாவட்டத்துக்கு வந்துள்ளது. இவர்களுள் போராட்டத்தில் 5, 6 வருடங்களுக்கு முன்னரும் இணைந்து கொண்டவர்களும், இந்த மாவட்டம் பற்றி முழுமையாக அறிந்துகொண்டவர்களும், இந்த மாவட்டம் பற்றி அறிந்துகொள்வதற்கு ஆவல் கொண்டவர்களும் அடங்குகின்றனர்.

எமது போராளிகளுக்கு இந்த மாவட்டம் நல்ல பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது. எமது விஜயம் வெற்றிகரமாக அமைந்துள்ளது. மக்கள் திடமாக இருக்கிறார்கள். போராட்டம் பற்றிய உயரிய சிந்தனையில் மக்கள் இருக்கிறார்கள் என்றார்.

திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கருத்துத் தெரிவிக்கையில் -

சமாதான காலத்தில் பல நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றது. சிலவற்றை முன்கூட்டியே தெரியப்படுத்தி, தவிர்க்கப்படவேண்டிய பொறுப்பு எல்லோரிடமும் உண்டு. இந்த மாவட்டத்தில் விளாங்குளம் பகுதியில் சிங்களக் குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. முன்னர் இந்தப் பிரதேசத்தில் பண்ணை வேலைகளில் ஈடுபட்டு இடம் பெயர்ந்து, வெளியிடங்களில் வாழும் 7 குடும்பங்களே இவ்வாறு குடியேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது, இந்தக் குடும்பங்கள் 30 உப குடும்பங்களாகியிருக்கின்றன.

இராணுவ முகாம்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் பௌத்த ஆலயங்கள் அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வரலாற்றில் தடம் பதிக்கக்கூடியதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கப்பல்துறைப் பகுதியில் நிலக்கரி சேமிக்கும் இடம் ஒன்று ஒதுக்கப்படுகின்றது. இங்கு அனல்மின் நிலையம் அமைப்பதற்கான முயற்சிகளும் செய்யப்படுகின்றன. நாங்கள் அரசியற்துறைக்கு உட்பட்ட விடயப் பொறுப்புகளில், நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இனவாதத்தைத் தூண்டும் முயர்சிகளுக்கு ஆதரவு கொடுக்கப் பல அமைப்புக்கள் இருக்கின்றன. இங்கு எமது உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் பேரினவாத அரசாங்கத்தால் திட்ட மிட்ட செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள் நலன் சார்ந்த அமைப்பு ஒன்று இந்த மாவட்டத்தில் உருவாக்கப்படவேண்டும். எமது மாவட்டத்தின் எல்லைப் பகுதியான புல்மோட்டைக் கிராமத்தின் சில வேலைத்திட்டங்கள், அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசங்கள் பற்றித் தெரிந்து கொண்டவர்களாக நாங்கள் இருக்க வேண்டும். எமது நிலங்கள் பற்றி ஆவணங்கள் சேகரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (04)

# தேசிய வாசிப்பு மாதமாக ஒக்ரோபர் மாதம் பிரகடனம்


(கொழும்பு)

எதிர்வரும் ஒக்ரோபா மாதத்தை தேசிய வாசிப்பு மாதமாகத் தேசிய நூலக சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


தேசிய வாசிப்பு மாதத்தின் தொடக்க விழா ஜனாதிபதி சந்திரிகா, கலாசார மற்றும் மனிதவள அபிவிருத்தி அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரின் தலைமையில், ஒக்ரோபர் முதலாம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதேச மட்டங்களிலும், இந்த விழாவை நடத்துவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, வாசிப்புப் பற்றிய தொனிப்பொருளை அடிப்படையாகக்கொணடு, தேசிய மட்டத்தில் சுவரொட்டிகள் மற்றும் புகைப்படப் போட்டிகளையும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மட்டத்தினரிடையேயும் வாசிப்புத் திறனை ஏற்படுத்துவதற்காகத் தேசிய மட்டத்தில் எடுக்கப்படும் முதலாவது முயற்சி இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது. (தே)




# கண்கவர் நிகழ்ச்சிகளுடன் ஒலிம்பிக் திருவிழா ஆரம்பம்



(ஏதென்ஸ்)

உலகம் முழுவதிலுமிருந்து 202 நாடுகளின் வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளும் ஒலிம்பிக் போட்டிகள், கிரீஸ் தலைநகர் ஏதெனஸில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடங்கின. தொடக்க விழா கோலாகலமாக நடந்தது.

உலகில் பழமையும், பெருமையும், புகழும் வாய்ந்த மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக்போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.

28 ஆவது ஒலிம்பிக் போட்டி கிரீஸ் நாட்டின் தலைநகர் ஏதென்ஸில் நேற்றுமுன்தினம் கோலாகலமாகத் தொடங்கியது. இதற்காக கிரீஸ் நாடு விழாக்கோலம் பூண்டுள்ளது. இலங்கை நேரப்படி நள்ளிரவு 11.45 மணிக்கு போட்டித் தொடக்கவிழா நடைபெற்றது.

தொடக்கவிழா நடைபெறும் அரங்கத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள் குழுமியிருந்தனர்.

ஒலிம்பிக்கின் ஆரம்ப விழா நிகழ்ச்சியில் கிரேக்கத்தின் பண்டைய கலாசார பிரதிபலிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. ஆரம்பவிழா அரங்கம் தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்தது. இது கிரேக்க நாட்டுக்கும், கடலுக்கும் எவ்வளவு தொடர்பென்பதனை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

பின்னர் இசைக் கருவிகள் முழங்க ஏராளமான வீரர்கள் பண்டைய கால உடையுடன் வந்தனர். அவ்வேளை பாதி மனித உருவிலும், பாதி குதிரை உருவிலும் ஒரு வீரர் ஏரியிலிருந்து தோன்றி ஏரியின் நடுவேயுள்ள கிரகத்தின் மீது அம்புவிட்டார். இந்த அம்பு கிரகத்தின் மீது வெடித்துச் சிதறி அதிலிருந்து ஐந்து ஒலிம்பிக் வளையங்கள் வெளிப்பட்டன.

பின்னர் பிரமாண்டமான மூன்று சிலைகள் அரங்கத்தில் தோன்றியது. இந்தச் சிலைகளின் கடைசியில் ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். இவன் பண்டைய வீரரைப்போல உடையணிந்திருந்ததுடன் ஆகாயத்தைப் பிளந்து வருவது போலவும் காட்சியளித்தான்.

தொடக்க விழாவில் ஒவ்வொரு நாட்டு வீரர்களும் தங்கள் நாட்டுக் கொடியை ஏந்துபவரின் தலைமையில் மிடுக்காக அணிவகுத்து வந்தனர்.

இதைத் தொடர்ந்து தொடர் ஓட்டமாகக் கொண்டுவரப்பட்ட ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது. அப்போது ரசிகர்களின் இடைவிடாத கரவொலியால் அரங்கமே அதிர்ந்தது. ஒலிம்பிக் கொடியும் ஏற்றப்பட்டது.

போட்டி தொடங்குவது முறைப்படி அறிவிக்கப்பட்டதும் வானத்தில் தோரணம் கட்டியதுபோல் வண்ணமயமான வாணவேடிக்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தொடக்க விழாவில் பிரமிக்கவைக்கும் வகையில் சாகசங்களும், கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இது காண்போரை வியக்கவைக்கும் விதமாக இருந்தது.

தொடக்க விழா அணிவகுப்பில் 202 நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் வீர வீராங்கனைகள் கலந்துகொண்டனர். முக்கிய பிரமுகர்கள் பலரும் தொடக்க விழாவில் பங்கேற்றனர்.

நவீன ஒலிம்பிக்கின் முதற்போட்டி ஏதென்சில் 1896 ஆம் ஆண்டு நடந்தது. ஒலிம்பிக் பிறந்த கிரேக்க மண்ணில் 104 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்தப் போட்டி நடைபெறுவதால் போட்டிக்கான ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி தொடர்ந்து வருகிற 29 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

ஒலிம்பிக் போட்டியையொட்டி கிரீஸில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்புப் பணியில் இரவு பகலாக ஈடுபடுகின்றனர்.

## முதல் தங்கப் பதக்கம் சீன வீராங்கனைக்கு!



(ஏதென்ஸ்)


கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரத்தில் நேற்று முன்தினம் மிகவும் கோலாகலமாகத் தொடங்கிய ஒலிம்பிக் போட்டியில் முதற்தங்கப் பதககத்தை ஆசிய நாடான சீனா பெற்றது.


பெண்களுக்கான பத்து மீற்றர் குறிபார்த்து துப்பாக்கி சுடும் போட்டியிலேயே முதற்தங்கப்பதக்கம் சீனாவுக்குக் கிடைத்தது. இந்த தங்கப் பதக்கத்தை சீனாவுக்கு டு லி பெற்றுக் கொடுத்தார்.

இந்தப் போட்டியின் வெள்ளிப் பதக்கத்தை ரஷ்யா பெற்றது. இதனை ரஷ்யாவின் லியுபோ கல்கினா பெற்றார். மூன்றாவது வெண்கலப் பதக்கத்தை செக் குடியரசு பெற்றது. செக்குடியரசு சார்பாக கதரீனா குர்கோவா பெற்றார்.




## ஒலிம்பிக் காட்சிகள்...






















## பாதுகாப்பு வளையத்தில் ஏதென்ஸ்




### இலங்கையுடனான இரண்டாவது டெஸ்ட்

# தென்னாபிரிக்க அணியை மழை காப்பாற்றியுள்ளது

இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெற்றுவரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று மழை காரணமாக எட்டு ஓவர்களே வீசப்பட்டநிலையில் தென்னாபிரிக்க அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 21 ஓட்டங்களைப்பெற்றது.

முன்னதாக மூன்றாம் நாள் ஆட்டத்தில் 4 வக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை அணி நேற்றுக்காலை ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. இதன மூலம் இலங்கை அணி492 ஓட்டங்களை தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இதன் பின் தென்னாபிரிக்க அணி மிகப் பெரிய வெற்றி இலக்கை நோக்கி ஆடத் தயாரானவேளை கடும்மழை பெய்யத்தொடங்கியது. இதனையடுத்து சுமார் நான்கரை மணி நேரத்திற்குப் பின்னரே ஆட்டம் ஆரம்பமானது.

எட்டு ஓவர்கள் பந்து வீசப்பட்ட நிலையில் மீளவும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இதில் தென்னாபிரிக்க அணி சார்பில் கிப்ஸ் 4, ஜார்ஸ்வெல்ட் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். சிமித் 9 கலிஸ் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்து வீச்சில் சமிந்தவாஸ், மலிங்க இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

# இளைய தலைமுறையினரை நெறிப்படுத்த அறநெறிப் பாடசாலைகள் அவசியம்

## திறப்பு விழா நிகழ்வில் டொக்டர் சின்னத்தம்பி தெரிவிப்பு

இன்று எமது இளைய சமுதாயம் தறிகெட்டு, நெறியிழந்து போதைப் பழக்கத்துக்கும், சமூகவிரோதச் செயற்பாடுகளுக்கும் அடிமையாகியுள்ளது.

மூத்தோரை மதியாமல், தமது விருப்பம் போல் நடந்து - தாமும் சீரழிந்து, தாம் சார்ந்த சமூகத்தையும் சீரழிக்கின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் - எமது முன்னோர் வகுத்த அறநெறிகளை எவரும் பின்பற்றாமையும், போதிக்காமையும் ஆகும் என, மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்பாள ஆலய அறநெறிப்பாடசாலை ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய டொக்டர் நா.சின்னத்தம்பி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் பேசிய அவர் -

முன்னைய காலத்தில் பாடத்திட்டத்தில உள்ளடக்கப்பட்டிருந்த பல நீதி நூல்கள் தற்போது நீக்கப்பட்டுள்ளதும் கவனிக்க வேண்டிய ஒன்று.

கசிப்பு உற்பத்தி, விற்பனை வீதிகளில் கூட்டங்கூடி நின்று வம்பளத்தல் போன்ற செயற்பாடுகளை நக்கி, இளைய சமுதாயத்தை நெறிப்படுத்த வேண்டும்.

இதற்காவே நாம் இன்று இந்த அறநெறிவகுப்பை ஆரம்பித்து வைக்கின்றோம்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்த ஆலய முன்றலில் நடைபெற்ற ஆரம்ப நாள் வகுப்பில் கலந்த கொண்ட 30 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இலவசமாகக் கொப்பிகளும், பென்சில்களும் வழங்கப்பட்டன.

ஆசிரியர் அம்பிகைப்பிள்ளை- ஆரம்பநாள் வகுப்புகளை நடாத்தினார். மாணவர் தொகை அதிகரித்திருப்பதாலும், மேலும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாலும் இரு ஆசிரியர்களை இணைத்து, இருபிரிவுகளாக வகுப்புகளை நடத்தும் திட்டம் உள்ளது எனவும் டாக்டர் நா.சின்னத்தம்பி தெரிவித்தார்.

மாணவர்தொகை இறுதியாக வரையறுக்கப்பட்ட பின்னரே, அவர்களுக்கான பாடநூல்கள் மற்றும் சீருடைகள் பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார்.

எனவே, கலந்துகொள்ளும் மாணவர்கள் உடனயாகப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.(24)



யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை இறுதிவருட மாணவர்கள் அண்மையில் வடகிழக்கு பிரதேச அபிவிருத்தி பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்காக சென்று திரும்பும்போது, தமிழீழ நிர்வாக கட்டமைப்பைப்பற்றி துறைத்தலைவர்களுடன் கிளிநொச்சியில் சந்தித்தபோது நிதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பராவுடன் காணப்படுகின்றனர். (20)

# கிராமங்களுக்கான தேவைகளின் விபரங்களை அனுப்ப கோரிக்கை

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களிலுள்ள தேவைகளின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் பிரதேசசபையின் செயலாளரைக் கேட்டார்.

வீதிகள், போக்குவரத்து, மின்சாரம், மருத்துவம், குடிநீர், விளையாட்டுத்திடல், சனசமூக நிலையங்கள், வாய்க்கால்கள், பொதுக்கிணறுகள், குளங்கள், முன்பள்ளிகள், கைத்தொழில் நிலையங்கள், தொடர்பான விபரங்களையே கேட்டுள்ளார்.

இதற்கான அமைவிடம் அளவுப் பிரமாணம், செலவுத்தொகை ஆகிய விபரங்களை உடன் அனுப்புமாறு அவர் கேட்டிருப்பதாக மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (91)

# வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நட்டஈடு

கடந்தகாலங்களில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டுத் தொகைகள் காசோலையாக வழங்கப்பட்டு வருகிறது.

நிவாரணம், புனர்வாழ்வு, மீளிணக்கத்துக்கான அமைச்சால் வழங்கப்படும் நட்டஈட்டைப் பெறுவதற்கான விபரங்களை அனுப்பிய அரச உத்தியோகத்தர்களுக்கு காசோலையாக அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தமது விபரங்களை அனுப்பி வைக்குமாறு, புனர்வாழ்வு மீளிணக்கத்துக்கான அமைச்சின் அதிகாரியான என்பரசு சந்திரன் தெரிவித்தார். (91)

# நெருக்கடியான காலகட்டங்களில் கைகொடுத்தவர்கள் கூட்டுறவாளர்களே

## கூட்டுறவு தினவிழாவில் செம்மணன்

எமது விடுதலைப் போராட்டமானது - பல்வேறு நெருககடிகளைச் சந்தித்து, அவற்றை முறியடித்து முன்னேறியது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கூட்டுறவாளர்கள் பல்வேறு வகையில் இந்த நெருக்கடி நிலைக்கு ஈடுகொடுத்து, விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்கு பங்காற்றி உள்ளதை பெரும் நன்றி உணர்வோடு இந்த இடத்தில் கூறிக்கொள்வதை இட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன் என யாழ்.மாவட்ட அரசியறதுறை துணைப பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

அண்மையில் ஊர்காவற்துறை ப.நோ.கூ.சங்கததால் நடாத்தப்பட்ட 82 ஆவது கூட்டுறவுதின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று இந்தச் சமாதானக் காலப் பகுதியில் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக, சந்திரிகாவின் பக்கத்தில் வீசும் பலத்த காற்றோடு சில கழிவுகள் அள்ளுண்டு ஒட்டிக்கொண்டுள்ளன.

இயற்கையில் நியதிப்படி காற்று ஒருநாள் வேகத்தை குறைத்துக் கொள்ளும், அதேவேளை ஒட்டிய கழிவுகள் கீழே விழ - எமது மக்கள் சுதந்திரக்காற்றைச் சுவாசிப்பார்கள்.

எனவே, அந்த இனிய நாளை வென்றெடுப்பதற்கு கூட்டுறவுக் கோட்பாட்டுக்கு அமைவாக - 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்கின்ற தத்துவத்தின் அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம் என்றும் கேட்டுக்கொண்டார்.

# நெடுந்தீவு வைத்தியசாலைக்கு ஸ்ரெச்சர் அன்பளிப்பு

(நெடுந்தீவு)

கனடா பழைய மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் பொருளாளர் அமரர் ஆர்.ஏ.பொன்னையாவின் ஞாபகார்த்தமாக, அவரது குடும்பத்தினரால் 'ஸ்ரெச்சர்' ஒன்று நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கென அனபளிப்புச் செய்யப்பட்டது.

இந்த ஸ்ரெச்சர் - கனடா பழைய மாணவர் ஒன்றியத்தின் நெடுந்தீவுக் கிளைத் தலைவர் இரா.சின்னத்தம்பியால், நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியரிடம் நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது - வைத்தியசாலையில் நிலவுகின்ற விலை கூடிய மருந்துகளின் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில், காலக்கிரமத்தில் அவற்றைக் கொள்வனவு செய்து, அன்பளிப்புச் செய்யவும், நெடுந்தீவுக் கிளைத் தலைவரால் உறுதியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# பிரதேச செயலகங்களூடாக டெங்கு பிரசார நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ். செயலகத்திலிருந்து பிரதேச செயலகங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

பிரதேச செயலகங்களூடாக வலயங்களாக பிரிந்து, டெங்கு தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான கருத்துரைகளை வழங்குதல், டெங்குநோய் உருவாகுவதற்கான காரணிகளை அகற்றுதல் போன்ற செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்தச் செயற் திட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் - பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தீ)

# சின்னஞ் சிறு செய்திகள்

### மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் தேசியமட்ட போட்டியில் பங்கேற்பு

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் இடம்பெறவுள்ள தேசிய மடட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ளனர்.

400 மீற்றர் ஓட்டப்போட்டியில் கனகராசா எழில்அரசி - 4x400, 4x100 ஆகிய அஞ்சலோட்டப் போட்டிகளில் ரவீந்திரன் சுபாஜினி, அற்புதராசா பகீரதி, இராஜரட்ணம் கபோந்தினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (91)

### மட்டுவில் கிராம அபிவிருத்திக்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை

மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்புரிமையைப் பெற்று, கிராம அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு நல்குமாறு, மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் சி.கனகரத்தினம் கேட்டுள்ளார்.

ஜே/313 மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தையுடைய, 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் அங்கத்துவப் பணமாக 25 ரூபாவும், மாதாந்த சந்தாவாக 10 ரூபாவையும் செலுத்துவதன்மூலம், அங்கத்தவராக முடியும் எனவும், அங்கத்துவ விண்ணப்பப்படிவங்களை சங்கத் தலைவர் நா.சின்னத்தம்பி, செயலாளர் செ.சுதாகரன், பொருளாளர் பொ.தெய்வேந்திரன் ஆகியோரிடம் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (24)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய மீளாய்வுப் பணிகள் துரிதம்

ஓய்வூதியத் திணைக்களத்தின் 6/2004 சுற்றுநிருபத்துக்கு அமைவாக, ஓய்வூதியர்களின் கொடுப்பனவு மீளாய்வுப் பணியில் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்னணியில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திலுள்ள 1478 ஓய்வூதியர்களில் - விதவைகள்/விதுரர் ஓய்வூதியர்கள் 422 பேரையும் தவிர, 1056 பேரில் சுமார் 400 ஓய்வூதியர்களுக்கு இந்த மாத ஓய்வூதியத்துடன் அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

ஜனவரி மாதத்திலிருந்த நிலுவையும் சேர்த்து வழங்கப்படும். ஆசிரியர்கள், வெளிநாட்டு ஓய்வூதியர்கள் போன்றவர்களுக்கும் அடுத்தடுத்த மாதங்களில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளதாகவும், தென்மராட்சிப் பிரதேச செயலக ஓய்வூதியப் பகுதியினர் தெரிவித்தனர்.

இடநெருக்கடியான நிலையில விரைவாக இவ்வளவு தொகை ஓய்வூதியர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (24)

## வெடிக்காத நிலையில் குண்டு

வெடிக்காத நிலையில் யாழ். கோட்டை பகுதியில் காணப்பட்ட வெடிகுண்டு நேற்றுமுன்தினம் காலை படையினரால் வெடிக்கவைக்கப்பட்டது.

யாழ்.முற்றவெளி கோட்டை முனீஸ்வரன் கோவில் பகுதியில் கடந்த சில தினங்களாக துப்புரவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தப் பகுதியில் குண்டைக் கண்ட தொழிலாளர்கள் -குண்டைச் செயலிழக்கச் செய்யும் பிரிவினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, அந்தப் பகுதிக்கு விரைந்த படையினர் - மக்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி குண்டை வெடிக்கவைத்தனர். (206)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : சி.வினோஜன்
முகவரி : வெள்ளம் போக்கட்டி, கொடிகாமம்.

மூன்றாவது அகவையில்



பெயர் : யோ.வேணுஜன்
முகவரி : கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன்

# நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கை

நல்லூர்ப் பிரதேசசபை எல்லைகுட்பட்ட பகுதிகளில், டெங்கு சம்மந்தமான பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நல்லூர்ப் பிரதேசசபைச் செயலாளர் வைரமுத்து தெரிவித்தார்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, கடந்தமாதம் டெங்கு சம்மந்தமான விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டிருந்தன.

எனினும், நல்லூர்ப் பிரதேசத்தில் டெங்குக்காய்ச்சல் பரவக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளமையால், எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் தீவிர பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்கள்.

முதற்கட்டமாக நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களினூடாகப் பொது மக்களுக்கான பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாடசாலைகள் ஆரம்பமானதும், பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்தப் பரப்புரைகள் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் துணையுடன் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் உதவி பெறபபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (ப)

# விளையாட்டு அரங்கம்



## ஒஸ்கார் விருதை பெறும் கிரிக்கெட் நட்சத்திரம் யார்?



மத்தியூ ஹெய்டன்

சர்வதேச கிரிக்கெட் சபை புதிதாக ICC விருது ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒஸ்காருக்கு நிகராக உலக அந்தஸ்துப் பெற்ற விருதாக இது மதிக்கப்படும் எனக் கருதப்படுகிறது. சிறந்த டெஸ்ட் வீரர், சிறந்த ஒருநாள் வீரர் உட்பட எட்டு விருதுகள் இதில் அடங்குகின்றன.

இந்த விருதுக்குரியவர்கள் - நடுவர்கள், போட்டி நடுவர்கள், முன்னாள் பிரபல வீரர்கள், தற்போதைய அணியின் கப்டன்கள் என 50 இற்கும் மேற்பட்டவர்கள் அளிக்கும் வாக்குகளிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

முதற்கட்டமாக 01.08.2003 - 31.07.2004 வரையான காலப்பகுதியே கருத்திலெடுக்கப்படுகிறது. இதில் சிறப்பாகச் செயற்பட்டவர்களுக்கான விருது வழங்கும் விழா - செப்ரெம்பர் 7 ஆம் திகதி லண்டனிலுள்ள அலெக்சாண்ட்ரா அரண்மனையில் நடைபெறவுள்ளது.

சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதை டெண்டுல்கர் பெறலாம் என்று தகவல்கள் அரசல்புரசலாக வெளிவந்த நிலையில், இது அவருக்குக் கிடைக்குமா? அல்லது அதைப் பெறப்போவது யார் என்பதே இங்கு நோக்குதற்குரிய விடயம்.

இந்தக் காலப்பகுதியில் இந்திய அணி - மூன்று சர்வதேச டெஸ்ட் தொடர்களில் விளையாடியுள்ளது. இந்த மூன்றிலும் சேர்த்து டெண்டுல்கர் ஒரு இரட்டைச்சதம் உள்ளடங்கலாக 659 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளார்.

இந்தக் காலப்பகுதியின் நடுப்பகுதியில் தரவரிசைப் பட்டியலில் ஏழு வருடங்களுக்குப் பின்பு முதன் முறையாக 10 இடங்களுக்குள் அவர் வராததும் மனங் கொள்ளத்தக்கது. ஆனால், ராகுல் ராவிட்டோ - மூன்று தொடரிலும் ஒவ்வொரு இரட்டைச்சதம் அடித்து, அவுஸ்ரேலியாவிலும், பாகிஸ்தானிலும் இந்தியா வரலாற்று வெற்றிபெறக் காரணமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த விருதுக்கு தற்போதைய அணித்தலைவர்களின் வாக்குச் சிபார்சுகளும் தேவைப்படுவதால், டெண்டுல்கரோ, ராவிட்டோ எனப் போட்டி வரும்போது கங்கூலியின் டெண்டுல்கர் மீதான காழ்ப்புணர்வின் பிரதிபலிப்பு ராவிட்டுக்குச் சாதகமாக அமையும் என்பது கண்கூடு.

டெஸ்ட் தரப்பட்டியல் வரிசை இதில் கருத்தில் எடுக்கப்படாது. எனினும், முதல் 10 இடங்களுள் வரும் வீரர்களில் ஒருவருக்கே இந்த விருது கிடைக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இந்த விருதை தென்னாபிரிக்க அணியின் ஜக்கலிஸ், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டன் லாரா, அவுஸ்ரேலிய அணியின் மத்தியூ ஹெய்டன் போன்றோரில் ஒரு வரும் தட்டிச்செல்லலாம்.



சச்சின் டெண்டுல்கர்

இந்தக் காலப்பகுதியில் ஜக்கலிஸ் மேற்கிந்தியத்தீவுகள், நியூஸிலாந்து அணிகளுக்கெதிரான டெஸ்ட் தொடரில் தொடர்ந்து 5 சதங்கள் அடித்து, சேர் டொன் பிரட்மனின் சாதனையைச் சமப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கெதிரான போட்டியொன்றில் 400 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்த லாராவும், அவரிடம் அந்தச் சாதனையைப் பறிகொடுத்த மத்தியூ ஹெய்டனும் முக்கியமானவர்கள். ஏனைய வீரர்களுடன் ஒப்பிடும்போது, இந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியில் அதிக சதங்களைக் குவித்து வெற்றி நாயகனாக விளங்குகிறார் மத்தியூ ஹெய்டன்.

இந்தக் காலப்பகுதியில் 1000 ஓட்டங்களைப் பெற்றவர்கள் - ராவிட், ஹெய்டன், லாரா, கலிஸ் போன்றவர்களாவர்.

2001 விஸ்டன் விருது லக்ஸ்மனுக்குக் கிடைத்தபோது, அது டெண்டுல்கருக்கு வழங்கப்படாமை குறித்து கண்டனமும், சர்ச்சையும் எழுந்த மாதிரி அல்லாமல், அனைத்துத் தரப்பாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும்படியான தெரிவை ICC மேற்கொள்ளுமா? காலம் தான் பதில் சொல்லும்.

- விமலன்

## மாறி விழுந்த மாலிக்கின் மாலைகள்

ஆறு நாடுகள் பங்கு பற்றிய ஆசியக் கிண்ணப்போட்டிகள் எவ்வாறு நடந்தது என்றுதெரியாமலேயே முடிவடைந்தது. எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி இருந்த இலங்கை அணி, மிகப் பெரும் ஆர்ப்பாட்டத்துடன் கிண்ணத்தை வெல்வோமென வந்த இந்திய அணியை வெறுங்கையுடன் அனுப்பி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டதும் தெரிந்ததே.

ஆனாலும் இந்தத் தொடரின் ஆட்டத் தொடர் நாயகன் விருது வழங்கப்பட்ட முறைதான் கொஞ்சம் நெருடலாகவுள்ளது. ஏனெனில், ஆட்டத் தொடர் நாயகன் விருது சனத்திற்குத் தான் கிடைத்தது. அதை அவர் பெறுவதற்குத் தகுதியானவரல்ல என்று கூற வர வில்லை.

ஏனெனில் சனத் ஒரு சிறந்த வீரர் என்பதில் யாருக்கும் எவ்விதத்திலும் துளிகூடச் சந்தேகமில்லை. அண்மைக்காலமாக அவரது அதிரடி ஆட்டங்கள் வீழ்ச்சி நிலையில் சென்று கொண்டிருக்கையில், இவரை ஏன் அணியில் வைத்துள்ளீர்கள் என்ப பலரும் விமர்சித்தபோது, மீளவும் தனது அதிரடிப் பாணியை ஆசியக் கிண்ணப் போட்டியில் காட்டியதுடன் இலங்கை அணியின் வெற்றிக்கு உறுதுணையாகவும் இருந்து தன்னை விமர்சித்தவர்களின் வாயை அடைத்தவர்.

நாம் கூறவருவது ஆட்டத் தொடர் நாயகன் விருதை சனத்திற்கு வழங்காமல் வளர்ந்து வரும் 22 வயதேயான பாகிஸ்தான் அணியின் சகல துறை வீரர் சொகைப் மாலிக்கிற்கு வழங்கியிருக்கலாமென்பதே.

நடந்து முடிந்த ஆசியக் கிண்ணப்போட்டியில் மூன்று நாடுகளின் மூன்று வீரர்கள் சிறப்பான சகலதுறை ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர். இலங்கையில் சனத், இந்தியாவில் சச்சின், பாகிஸ்தானில் சொகைப் மாலிக்.



சொகைப் மாலிக்
கவலைப்படாதே சகோதரா

இதில் சனத் ஐந்து போட்டிகளில் விளையாடி இரண்டு சதங்கள் உட்பட 293 ஓட்டங்கள் சராசரி 73.25. அதே ஐந்து போட்டிகளில் இவர் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். சராசரி 19.50.

அடுத்து சச்சின் 6 போட்டிகளில் விளையாடி 281 ஓட்டங்கள் சராசரி 55.20, ஆறு போட்டிகளில் கைப்பற்றிய விக்கெட்டுக்கள் 12 சராசரி 12.5 -

ஆனால் ஐந்து போட்டிகளில் விளையாடிய பாகிஸ்தான் வீரர் சொகைப் மாலிக் பெற்ற ஓட்டங்கள் 306 - சராசரி 63.20, அதே போட்டிகளில் கைப்பற்றிய விக்கெட்டுக்கள் 9 சராசரி 14.55.

எனவே ஆட்டத்தொடர் நாயகன் விருதிற்கு தெரிவாகும் ஒருவரின் ஓட்டங்கள், விக்கெட்டுக்கள் என்பன இறுதிப் போட்டியில் கணக்கெடுப்பதில்லை என்று பார்த்தாலும் சனத்தைவிட சொகைப் மாலிக் ஓட்ட எண்ணிக்கையிலும், விக்கெட்டுக்களிலும் உயர்ந்து நிற்கின்றார்.

சனத் மற்றும் சச்சின் இருவரும் எத்தனையோ ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதுகளை பல போட்டிகளில் பெற்றுள்ளனர். அத்துடன் இவர்கள் இருவரும் அனுபவம் வாய்ந்த மூத்த வீரர்களும் கூட.

ஆனால், சொகைப் மாலிக் தற்போதுதான் வளர்ந்துவரும் ஒரு சகல துறை வீரர். எனவே அவரை மேலும் ஒரு சிறந்த வீரராக மேம்படுத்துவதற்கு ஆட்டத் தொடர் நாயகன் விருதை வழங்கியிருந்தால் என்ன? ஏனெனில் ஆட்டத் தொடர் நாயகன் விருதைப் பெறுவதற்கு அவருக்கு சகல தகுதிகளும் இருந்ததே.

- யசோ

## மஞ்சள் நதியில் ஏன் இரத்தக் கறை?

சீனாவின் பீஜிங் நகரிலுள்ள தொழிலாளர் விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆசியக் கிண்ணக் கால்பந்தாட்ட இறுதிப்போட்டியின்போது சீன அணியை 3-1 என்ற கோல்கணக்கில் தோற்கடித்ததன் மூலம் நடப்புச் சம்பியனான ஜப்பான் அணி மீண்டும் ஆசியாவின் கால்பந்தாட்ட ஜாம்பவான்கள் நாங்களே என நிரூபித்துள்ளது.

ஆனாலும், இந்த இறுதிப் போட்டியில் நடுவராகக் கடமையாற்றிய குவைத்தைச் சேர்ந்த சாத்கமீல் அளித்த தீர்ப்புக்கள் சில சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளன. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சீன அணியின் பயிற்றுவிப்பாளர் வேண்டுமென்றே நாம் தோற்கடிக்கப்பட்டோம் எனத் தெரிவித்தார். ஆனால், சீன அணியின் தோல்விக்கு நடுவரின் தீர்ப்பு மட்டுமே காரணமெனக் கூறிவிட முடியாது.



திருவிழா வெற்றிதான்

ஏனெனில் ஆட்டம் ஆரம்பித்து எட்டாவது நிமிடத்தில் சீன வீரர் லீ ஜின்யூ தலையால் முட்டி முதலாவது கோலைப் போட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஜப்பான் அணியினர் சற்று நிலை தடுமாறிக் காணப்பட்டபோதும் அதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த சீன அணியினர் தவறிவிட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சீன அணியினர் தாக்குதல் ஆட்டத்தைத் தொடராது, தற்காப்பு ஆட்டத்தையே தொடர்ந்தனர். இந்த நிலையில் ஜப்பான் அணியினர் சீன அணியினருக்கு நெருக்குதலைக் கொடுத்தவண்ணமேயிருந்தனர்.



ஆசியாவுக்குப் பெருமை

ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் ஜப்பான் அணியின் முன்னணி வீரர் சீன வீரர்களுக்கிடையில் பகீரதப் பிரயத்தனம் செய்து ஒரு கோலைப் போட்டார். இதன்போது சீன வீரர்களை கைகளால் தள்ளிவிட்டே ஜப்பான் வீரர் ஹசீமா அன்ரலஸ் கோல் அடித்தாக சீன வீரர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

ஆனால் காற்பந்தாட்டங்களில் இப்படியான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. கோல்போடும் சந்தர்ப்பங்களில் வீரர்கள் ஒருவரை ஒருவர் வேண்டுமென்றே தள்ளுவதென நடுவர் கருதினால் மட்டுமே தண்டனை வழங்கப்படும். எனவே, இந்த விடயத்தில் சீன வீரர்கள் குறை கூறுவது பொருத்தமானதல்ல.

ஜப்பானிய வீரருக்குப் பின்னே நின்று உண்மையில் பந்தினை எடுக்க முற்பட்ட சீன வீரருக்கு எதிராக வழங்கப்பட்ட நேர் உதையும், ஜப்பான் அணியின் வெற்றி வாய்ப்புக்கு சாதகமானதால் அதுவும் சர்ச்சைக்குள்ளாகியது.

ஆட்டத்தின் 78 ஆவது நிமிடத்தில் ஜப்பான் அணி மீண்டும் ஒரு கோலைப் போட்டு தனது வெற்றியை உறுதிப்படுத்தியது.

ஆட்டம் முடிவதற்குள் கோல் போடுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அதை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத சீன அணி தோல்வியைத் தழுவிக் கொண்ட பின்னர், இரண்டாம் இடத்துக்கான கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்தமை ஏற்புடையதல்ல.

- லெஸ்லி.

# நிமிர்ந்து நிற்கிறோம் பாருங்கள்

கிளிநொச்சியில் நடைபெற்று முடிந்த இளையோர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நிகழ்வில் சுட்டிக் காட்டக் கூடிய முதன்மை நிகழ்ச்சியொன்றைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. உதைபந்தாட்ட ரசிகர்கள் எண்ணிக்கையை கூடுதலாகக் கொண்டதொரு விளையாட்டாக இருந்தாலும் ஆடவருடன் தொடர்பு பட்டே பார்க்கப்படுவது தான் வழக்கம். ஆனால் இந்த முறை மகளிர் உதைபந்தாட்டம் என்று கண்காட்சி நிகழ்வு போலல்லாத, ஒரு சுற்றுப் போட்டியாகவே நடைபெற்றதை அவதானிக்க முடிந்தது. மேற்குலகில் விளையாட்டுத்துறையில் ஒவ்வொரு அம்சத்திலும் மகளிர் பங்களிப்பு இருக்கும். ஆனால்





இங்கு அப்படியல்ல.

கிளிநொச்சிச் சுற்றுப்போட்டி இனி அப்படி இருக்காது என்பதை மிகச் சிறப்பான மகளிர் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி மூலம் நிருபித்திருக்கிறார்கள். 'உதைப்பந்தாட்டம் போன்ற வலுமிக்க போட்டிகளில் மகளிர் பங்குபற்றி அவர் தம் வலுவை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் தமிழர் தாயக மகளிர் வலுவை உலகமட்டத்தில் எடுத்துக்காட்ட வேண்டும். நாம் யாருக்கும் சளைத்தவர்கலல்ல. சமமானவர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.' என்று விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி மிகத் தெளிவாகத் கூறிய கருத்துக்கள் மிகவும் பொருத்தமானவை.

- ஜோசப் கிருஷ்ணா

# யாருக்குத் தங்கம்




சோன் குறோபோட்
யாருக்கோ யாரிவர்

திரும்பவும் அதே விடயம்தான். ஆனால், இவர் தான் என்று குறிப்பாகக் கூற இயலவில்லை. இருந்தாலும் இவர்களில் ஒருவர்தான் என்று - சிறிது தயக்கத்துடன் என்றாலும் - கூற முடியும் போலத் தெரிகின்றது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்பாக நடைபெறப்போகும் இறுதித் தடகளப்போட்டி ஜூரிச் நகரில் நடைபெறவுள்ள கோல்டன் லீக் தடகளப் போட்டிகளாகும். இங்கு உண்மையில் நடைபெறப்போவது ஏதென்ஸ் 100 மீற்றர் இறுதிப் போட்டிதான் என்பது பல தடகள விமர்சகர்களின் கருத்தாக அமைந்துள்ளது. லண்டனில் மொரிஸ் கிரீனைத் தோற்கடித்த ஜமெய்க்கா நாட்டின் அஸாபா பவல் தான் தங்கம் பெறுவேனென்று எல்லோரும் எதிர் பார்ப்பது தனக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுத்திருப்பதாகக் கூறுகிறார். ஆனாலும், நான் தைரியத்தை இழக்காமல் இருக்க முயற்சிக்கிறேன் என்கிறார். உண்மையைக் கூறுவதாயின் மொறிஸ்கிறீன் அல்லது ஷோன் குறோபோட்தான் 100 மீற்றர் தங்கத்தை வெல்லத் தகுதியானவர் என்பது பலவின் கருத்து.

மேலும் இந்த வருடத்தின் 100 மீற்றர் ஓட்டத்தின் அதிகுறைந்த நேரமான 9.81 செக்கனைத் தன்னகத்தே கொண்டிருப்பவர் குறோபோட் தான். இவர்களுடன் ஜூரிச்சில் கலந்து கொள்ளப் போகிறார்கள். சென். கிட்ஸ் தீவைச் சேர்ந்த உலக சம்பியன் கிம் கொலின்ஸ், போர்த்துக்கல் நாட்டின் பிரான்சிஸ் ஒபெக் வெலு, அமெரிக்காவின் வீரர்கள் ஜோண் கேப்பல், ஜஸ்ரின் கெட்லின், கோபி மில்லர் ஆகியோர் கலந்து கொள்ளப் போகிறார்கள். எனவே ஜூரிச் தடகளப் போட்டியின் 100 மீற்றர் ஓட்டத்தில் கலந்து கொள்ளும் மேற்படி ஜாம்பவான்களில் ஒருவரே ஒலிம்பிக் போட்டிகளிலும் வென்று உலகின் வேகமான மனிதன் என்ற பெயரைத் தட்டிச்செல்லப் போகிறார். அவர் யார் !!!

- சர்மிளா



ஜஸ்ரின் கெட்லின்
அந்த ஒரு வினாடி யாருக்கு

# கூட்டுக்குடும்பம்... கொண்டாட்டம்



மொனிக்கா செலஸ்
அம்மணிக்கு அந்தமாதிரிச் செல்வாக்கு

ரெனிஸ் வீரர்கள் தங்கள் சுற்றுப் பயணங்களின் போது ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களில் தான் தங்குவார்கள். அவர்களது வருமானம் அப்படி. ஆனால் அது ஒரு தனிமை வாழ்வாகவே இருக்கும். இதேவேளை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு கொள்பவர்களோ பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள். இங்கு அவ்வளவு பேரையும், மற்றத்துறை சார்ந்த வீரர்களையும் அடக்குவதற்காக ஒலிம்பிக் கிராமங்கள் அமைக்கப்படும். இது நினைக்க முடியாத கலகலப்பான இடமாக இருக்கும்.

இதனைத் தான் ரென்னிஸ் வீரர்கள் இப்போது கூறுகிறார்கள். இது ஒரு தனித்துவமான அனுபவமாக இருக்கப் போகிறது. 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டிகளின் போது பதினைந்து நாட்கள் ஒலிம்பிக் கிராமத்தில் இருந்தது புதியதோர் அனுபவம் என்கிறார் ரெனிஸ் வீரர் ஒருவர் மொனிக்கா செலஸ் கூறும்போது பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களைச் சந்திக்கக் கிடைத்தது ஆச்சரியமும் ஆனந்தமும் தான் என்கிறார். உலகத் தரவரிசையில் முதன்மை வீரர் றொஜர் பெடரர் கிராம வாழ்க்கை பற்றி அதிசயப்பட்டுவிட்டு, தங்கம் வெல்வதே தனது பெரும் அவா என்கிறார். சிட்னி ஒலிம்பிக் அரையிறுதியில் தோற்றுவட்டு நான் நிரம்பவே அழுதேன் என்கிறார்.

ஏதென்ஸில் போட்டிகளில் பிரெஞ் ஒபனில் முதலாம், இரண்டாம் இடம்பெற்ற அனஸராசியா மிஸ்கீனா, மற்றும். எலினா டெமன்ரீவா மற்றும் வில்லியம்ஸ் சகோதரிகள் எல்லோரும் ஏதென்ஸ கிராமத்துக்குப் போகப் போகிறார்கள். ஆனால், உலகத் தரவரிசை ஒன்றைப் பெற்றுள்ள ஜஸ்ரின் ஹெனின் உபாதைகளுக்கு உள்ளாகியதால் போகப் போவதில்லை. இன்னொரு மனத்தளர்வான செய்தி என்னவெனில் ரஷ்யா ஒலிம்பிக் போட்டிக்கான ரெனிஸ் அணியைத் தெரிவு செய்யும் போது தரவரிசை நான்கிற்குள் விம்பிள்டன் சம்பியன் மரியா ஷரபோவா இல்லை. ஆகவே ஏதென்சுக்கு வரப்போறா மரியா ஷரபோவா என்றெண்ணியவர்களுக்கு அவவரமாட்டா என்பதே அந்த மனத்தளர்வான செய்தி.

- ஜெயா



பெடரர்
ஆயிரம் நட்சத்திர உறவு


## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. ஆசியக்கிண்ண உதைபந்தாட்ட சம்பியன் யார்?
02. ICC சம்பியன்ஸ் ரொபி அடுத்த மாதம் எங்கே நடைபெறவுள்ளது?
03. ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆட்டத்தொடர் நாயகன் யார்?

**விளையாட்டுப் புதிர் 18**

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:........................................

முகவரி:........................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 24.08.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

விலாசம்: விளையாட்டுப் புதிர்-இல.18
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**விளையாட்டுப்புதிர் - 17**
**வெற்றியாளர்**
இராசரத்தினம் பாலதயாளன்
சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டை

அனுசரணை:
ஜொனெக்ஸ் மலீரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
**YONEX MULTI PALACE**
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# லொத்தர்சபை சீட்டிழுப்பில் யாழ் வாசிக்கு ரூபா 10 லட்சம்

தேசிய லொத்தர் சபையின் யாழ்.மாவட்ட முகவர் சோ.மகேந்திரலிங்கத்தால் நேற்றுமுன்தினம் விற்பனை செய்யப்பட்டு, குலுக்கப்பட்ட 1639 ஆம் இலக்க மஹஜன சம்பத சீட்டிழுப்பில் - யாழ். வாசியொருவர் 10 லட்சம் ரூபாவைப் பரிசாக வென்றுள்ளார்.

இந்தப் பரிசுச்சீட்டை வைத்திருப்பவர் இல.55, முனீஸ்வரர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ அல்லது கொழும்பு - 03 இல் அமைந்துள்ள தேசிய லொத்தர் சபையுடனோ தொடர்பு கொள்ளுமாறு யாழ். முகவர் அறிவித்துள்ளார்.

பரிசுக்குரிய வெற்றி இலக்கம் N 816405 ஆகும்.

# குடத்தனை பாடசாலைக்கு புதிய நூலகம்

(குடத்தனை)

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு - ஏழரை லட்சம் ரூபா செலவில் புதிய நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நூலகம் -கணினி அறைகள் கொண்ட, சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் 25 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனர் அமைப்புக் குழு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

## சிகை ஒப்பனை நிலைய

# கழிவுகளை அகற்றுவதற்கு மாநகரசபையிடம் உதவி

(கொக்குவில்)

சிகை ஒப்பனை நிலையங்களில் சேரும் கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அகற்றி, சுகாதாரத்தைப் பேணும் வகையில் யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் - உதவி கோரும் தீர்மானமொன்று சிகை ஒப்பனையாளர் சங்க கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை - அதற்கு ஒத்துழைக்காத பட்சத்தில், அடையாள கடையடைப்பு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிகை ஒப்பனையாளர் நிலையங்களில் அகற்றப்படும் கழிவுப் பொருட்கள் பொது இடங்களில் கொட்டப்படுவதால், ஏற்படக்கூடிய அசௌகரியங்களை சுட்டிக்காட்டியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (206)

# மட்டுவில் வடக்கு கிராமத்தின் தேவைகள் குறித்து அரசியற் துறையினருடன் கலந்துரையாடப்பட்டது

(மட்டுவில்)

மட்டுவில் வடக்குப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்களுடன- தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியற்துறையினர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் - தென்மராட்சி அரசியற்துறையைச் சேர்ந்த ஸ்ரீதரன் உட்பட, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

மட்டுவில் வடக்கு கிராமத்தில் காணப்படும் குறைகளையும், பின்வரும் தேவைகளையும் பொது மக்களின் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டன.

அதாவது - மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் வீதி திருத்தம், மட்டுவில் -புத்தூர் வீதியில் அம்மன் கோயிலுக்கு அண்மையிலுள்ள அடைபட்டுள்ள மதகுகளை மீளச் செப்பனிட்டு, சீரான நீர்ப்பாசனத்துக்கு உதவுதல், கசிப்பு உற்பத்தி, விற்பனை, சட்டவிரோத சாராய விற்பனை என்பவற்றைத் தடுத்தல்.

மட்டுவில் வடக்குப் பகுதிகளில் உள்ள குளங்களை ஆழமாக்கித் திருத்தஞ் செய்தல், மட்டுவில் வடக்கிற்கு விரைவில் மின்சார வசதியை ஏற்படுத்தல், சாவகச்சேரியிலிருந்து சங்கானை வரை செல்லும் 775 ஆம் இலக்க பஸ் சேவையை மீள ஆரம்பித்தல், சட்டவிரோத மண்ணகழ்வைக் கட்டுப்படுத்தல் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவற்றுக்குப் பதிலளித்த ஸ்ரீதரன் - பொது மக்களின் ஒத்துழைப்பும், ஒற்றுமையும் இந்தச் செயற்பாடுகளுக்கு மிக அவசியம் எனவும், இவற்றில் பலவற்றை அவர்களாகவே தீர்க்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இன்று இந்தக் கலந்துரையாடலுக்கு போதியளவு மக்கள் கலந்து கொள்ளாமை வேதனையளிப்பதாகக் கூறியதோடு, இங்கே கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக தம்மாலான உதவிகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார் (24)



தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் அலுவலகத் திறப்புவிழாவில் மங்கள விளக்கேற்றப்படுவதைப் படத்தில் காணலாம். (29)



நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் விளையாட்டு நிகழ்வில் வெற்றிபெற்ற சிறுவன் ஒருவனுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட எஸ்.அசோர விஜேசிங்க பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (113)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி மானிப்பாய் பிரதேசசபையால் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டி நிகழ்வில், முன்பள்ளி ஆசிரியைக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (100)

## நெடுந்தீவிலிருந்து

# கால்நடைகளை வெளி இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்குத் தடை விதிப்பு

நெடுந்தீவு பிரதேச மக்களின் தேவைகளுக்கான மணல் ஏற்றுதல் மற்றும் கால்நடைகளை - சந்தை வாய்ப்புக்கருதி யாழ்.நகர் கொண்டு செல்வதற்கான அனுமதிகளைக் கடந்தவாரம் முதல் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் - பொது அறிவித்தல் மூலம் தெரியப்படுத்தியுள்ளனார்.

மணல் ஏற்றுதல், கால்நடை ஏற்றுதல் போன்றவற்றுக்கான அனுமதிகளை யார் வழங்குவது என்ற ஒரு நிலைப்பாடு நெடுந்தீவுப் பொலிஸாருக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும் இடையில் கடந்த சில மாதங்களாக இழுபறி நிலையில் இருந்து வந்தமையே, இந்த அனுமதி வழங்கல் இடைநிறுத்தத்துக்குக் காரணம் எனத் தெரியவருகின்றது.

இந்த நிலையினால் தங்களது சொந்தத் தேவைகளுக்கென நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு கால்நடையைக் கூடக்கொண்டு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளமை இங்கே குறிபபிடத்தக்கது (113)

# பொதுசன உதவிப்பணம் கொடுப்பனவு

நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்டவர்களுக்குரிய 2004 ஓகஸ்ட் மாத பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு - எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது.

நெடுந்தீவுப் பிரதம தபாலகம் மற்றும் கிழக்கு, மேற்கு உபதபாலகங்கள் ஊடாக இந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவுள்ளது. (113)

# அரசாங்கத் தேர்வுகள் மாணவர்களை மனப்பாதிப்படையச் செய்கின்றன

## கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் தெரிவிப்பு

அரசாங்கத் தேர்வுகள் மாணவர்களை மனப்பாதிப்பு அடையச் செய்வனவாக இருக்கின்றன.

புலமைப் பரிசில் பெறுபேற்றுக்காக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்குகின்றனர். இவ்வாறு தமிழீழ கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு, துளசிபுரத்தில் அமைந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் புதன்கிழமை காலை நடைபெறறது.

இதில் மேம்பாட்டுப் பேரவையின் செயற்பாடு, நோக்கம் பற்றி அருண் மாஸ்ரர் எடுத்துரைத்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துக் கூறுகையில் -

மாணவர்கள் மத்தியில் கல்வி திணிப்பதாக இருக்கின்றது. தேர்வுகளும் அவ்வாறே விளங்குகின்றன. தேர்வுகள் மாணவர்களுக்குத் தண்டனையாக இருக்கக்கூடாது.

புலமைப் பரிசில் பரீட்சையைப் பொறுத்தவரை மாணவர்கள் சித்தியடைந்தாலும், வெட்டுப்புள்ளிக்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்களே சித்தியடைந்தவர்கள் என்ற மனோநிலையைத் தோற்றுவிக்கின்றது.

இதனால், 100 இக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்களது மனநிலை பாதிக்கப்படுகின்றது.

சாதாரணமாக 35 புள்ளிகளை ஒரு பாடத்தில் பெற்றவர்கள - சித்தியடைநதவர்களாகக் கணிக்கப்படுகின்ற வேளையில் இந்தப் பரீட்சை வெட்டுப்புள்ளியைக் கொண்டே இந்தச் சித்தி சமூகத்தினரால் தீர்மானிக்கப்படுகின்றது.

வெட்டுப்புள்ளிகள் புலமைப்பரிசில் பெறுவதற்கே அன்றி, சித்தியைத் தீர்மானிப்பதற்கு அல்ல என்றார்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாடு விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் -

கல்வி முயற்சிகள் தனிப்பட்ட முறையிலேயே நடக்கின்றது. குழுவாக செயற்பட முடியாத நிலையில் அனுபவ முதிர்ச்சி - சிறப்பான பலனைத் தராது இருக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் சமீபகாலமாகப் பெற்றோர் மத்தியில் கல்வியில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதிபர், ஆசிரியர் - மாணவர்களுக்காக சாதிக்கவேண்டியது நிறைய உண்டு.

இந்த மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுகின்றது.

பாடசாலைகளில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்கள் - பற்றாக்குறையான பிரதேசத்துக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார். (04)

# சிகை ஒப்பனையாளர்களுக்கான சம்பளம் 50 ரூபாவால் அதிகரிப்பு

சிகை ஒப்பனையாளர்களின் நாள் சம்பளம் 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக நெருக்கடிக்கு ஆளாக நேரிட்டு வந்த தொழிலாளர்களின் இன்றைய நிலையை நிர்வாகம் விவாதித்து, தொழிலாளர்களின் சம்பளத்தை 50 ரூபாவால் அதிகரிக்க இணக்கம் காணப்பட்டது.

இதுவரை நாளொன்றுக்கு 250 ரூபாவைச் சம்பளமாகப் பெற்றுவந்த தொழிலாளர்களின் சம்பளம் இனி 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஏனைய தொழிலாளர்களின் சம்பளம் இதைவிட அதிகமாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் கடை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் இரு பகுதியினரதும் இணக்கப்பாட்டுடன் - ஒரு நாளில் தொழில் செய்யும் முழுத்தொகையில் இருந்து அரைப்பங்கை வேதனமாக வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (206)

# நெடுந்தீவு வைத்தியசாலையில் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கான 2 ஆம் காலாண்டுக்கான மருநது வகைகள் - முழுமையாக வந்து சேராமையால், பெரும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதால் பெருமளவு நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொய்வு, பிரசர் போன்ற நோய்களுக்கான மருத்துகள், விற்றமின் சீ மற்றும் பல அவசியத் தேவையுள்ள மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

பிறசருக்கான கிளினிக்கின் போது வருகின்ற நோயாளர்களுக்கு மருந்துவகைகள் வழங்குவதில், பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (113)

# மாநகரசபை தொண்டர்களுக்கு அடையாளச் சின்னம்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள நல்லூர் முருகன் ஆலய வருடாந்த உற்சவ நிகழ்வின் போது க்டமையாற்றவுள்ள யாழ். மாநகரசபைத் தொண்டர்களுக்கு, அடையாளச் சின்னம் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையினர் தெரிவித்தன.

நல்லூர் உற்சவகாலங்களில் பணியாற்றும் தொண்டர்கள் எதிர்நோக்கக்கூடிய சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே, இந்தமுறை அவ்வாறு அடையாளச் சின்னம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்புஇல*
*வேண்டுபவ வேட்பச் சொலல்*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதி - ரணில் சந்திப்பு முயற்சி..... தேசிய அரசை அமைப்பதில் முடியுமா ?

அரசுக்கு உள்ளேயும்சரி, வெளியேயும் சரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அரசியல்ரீதியிலும் சரி, நிர்வாகரீதியிலும் சரி, சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் தொடர்பாகவும் சரி தற்போதய நிகழ்சூழலில் பல்வேறு முனைகளில் நெருக்கடிகள் அதிகரித்து வருவதை அவரின் அண்மைக்கால அறிக்கைகள் மூலமும் செயற்பாடுகள் மூலமும் உணரக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக கடந்த இரண்டு மூன்று வாரங்களுள் - அதுவும் அவர் தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துவிட்டு நாடு திரும்பிய பின்னர் அவருக்கும், அவரது பிரதான தோழமைக் கட்சியினரான ஜே.வி.பியினருக்குமிடையிலான உறவுகளில் ஒரு விதமான முறுகல் நிலை தோன்றத் தொடங்கியதையடுத்து இந்த நெருக்கடி அதிகரிக்கத் தொடங்கியதெனலாம்.

புதிய ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்றது முதலே அரசாங்கத்தினுள் தன் மேலாதிக்க வலுவை மேலும் அதிகளவில் விஸ்தரித்துக் கொண்டு - மெல்ல மெல்ல தனது அதிகார ஆளுமையை கூட்டணிக்குள் செலுத்தத் தொடங்கியதன் பின்னர், தாங்களில்லாவிட்டால் அரசு நிலைக்காது என்ற திமிருடன் அரச நிர்வாகத்தின் சகல அம்சங்களுக்குள்ளும் நுழைந்து, அதுபற்றி சுயாதீனமான முறையில் கருத்துக்களை முன்வைத்தும், விமர்சனங்களை வெளிப்படையாகக் கூறியும், விமர்சித்தும் வந்தமையானது - தம்மை எவராலும் கட்டுப்படுத்த முடியாது என்ற அவர்களின் உளப்போக்கை வெளிப்படுத்துவதாகவே இருந்தமையால் ஜனாதிபதியால் இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியது.

கட்சிக்குள் அவர்களின் விருப்பங்களுக்கெல்லாம் - சூழ்நிலையின் அவசியம் காரணமாக - வளைந்து கொடுத்து, விட்டுக் கொடுக்கக்கூடாத விடயங்களுக்கெல்லாம் விட்டுக் கொடுத்ததன் காரணமாக ஜே.வி.பியினர் அரசையே மிரட்டும், எச்சரிக்கும் மற்றும் அச்சுறுத்தல் விடுக்கும் சக்தியாக தனக்கே சவால் விடுக்கும் நிலைக்கு வந்துவிட்டனர் என்பதை ஜனாதிபதி உணர்ந்து கொள்வதற்கு மூன்று மாதத்துக்கும் அதிகமான காலம் தேவைப்பட்டது.

இப்போது முறுகல் நிலை, விரிசல்நிலைக்குப் போகும் அபாயம் தென்படும் சூழலில் ஜே.வி.பியினரை தவிர்த்துவிட்டு வேறு வழியில் அரசைப் பாதுகாக்கும் மூலோபாயங்களை கையாள்வதில் ஜனாதிபதி திரைமறைவுக் காய் நகர்த்தல்களையும், வெளிப்படையான சில நகர்வுகளையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார் என்றே கூறலாம்.

இந்தச் செயற்பாடுகள் - அவருக்கு ஜே.வி.பியினரால் இதுவரை காலமும் அரசியல்ரீதியிலும், நிர்வாக ரீதியிலும் எதிர் கொள்ள வேண்டி நேர்ந்த அழுத்தங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும் மாற்று ஏற்பாடுகளை மேற்கொண்டு அரசை ஸ்திரப்படுத்தவும் உதவும் என்றே ஜனாதிபதி நம்புகிறார். என்றே தோன்றுகிறது.

முதலில் கட்சித் தலைமையில் இருந்து விலகி கட்சிக்கும் தனக்குமான நேரடித் தொடர்பைத் துண்டித்ததன் மூலம் கட்சி தொடர்பான - அதாவது ஆளும் ஐ.ம.சு முன்னணி தொடர்பாக எவரும் தன்மீது எந்த அழுத்தத்தையும், நெருக்குதலையும் தரமுடியாத சூழலை ஏற்படுத்திய ஜனாதிபதி அதன் மூலம் ஜே.வி.பியினரிடமிருந்து தன்னை சற்று தூர விலத்தி வைத்துக் கொண்டார்.

-இது ஜே.வி.பியினர் சற்றும் எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

-அடுத்து அவர்களுடனான சந்திப்பொன்றை நிராகரித்து மறுத்தார்.

-இது ஜே.வி.பியினருக்கு ஜனாதிபதி கொடுத்த நெத்தியடியாகும்.

இப்போது திடீரென்று அரசியலமைப்பை மாற்றுவதற்கு எதிர்க்கட்சியின் அதாவது ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவைப்பெற ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

-இது உண்மையில் சாத்தியமாகும் விடயமாக, இரு தரப்பினருக்குமிடையே ஆக்கபூர்வமான வகையில் உடன்பாடு காணுமளவிற்கு சென்றால்....

அது ஜே.வி.பிக்கு கிடைக்கும் மரண அடியாகிவிடும்.

ஆனால், அது எந்த அளவுக்கு சாத்தியமாகும் என்பது வேறுவிடயம். சிங்கள அரசியலில் இரு பிரதான கட்சிகளுக்கும் ஜே.வி.பி நீண்டகாலப் பகையாளிக் கட்சியேயாகும். அதன் தற்போதைய பூதாகார வளர்ச்சிக்கு ஜனாதிபதியின் சுயநல அரசியல் இலாப நோக்குடைய ஆதரவே காரணமாகும். இந்த பூதாகார வளர்ச்சி எதிர்காலத்தில் இரு பிரதான சிங்களக் கட்சிகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்கும்.


இந்த மூன்றுமாத கால ஐ.ம.சு முன்னணியின் ஆட்சி இந்த ஆபத்து குறித்த எச்சரிக்கையை ஜனாதிபதிக்கும், ரணிலுக்கும் உணர்த்தியே இருக்கும்.

இடைக்காலநிர்வாக அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தான் தயார் என ஜனாதிபதி சில வாரங்களின் முன் அறிவித்தபோது, அதனை முழுமூச்சுடன் எதிர்க்கப் போவதாக ஜே.வி.பி எச்சரித்த போது தாங்கள் அதற்கு ஆதரவு வழங்கத்தயார் என ரணில் அறிவித்தமையானது இச்சமயத்தில் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

இப்போதைய அரசியல் சூழலில் தன்னைச் சுற்றியுள்ள அரசியல் மற்றும் நிர்வாக நெருக்கடிகளைத் தவிர்க்க ஏதோவோர் மாற்றுவழியை உடனடியாகத் தேடவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் உருவாகியுள்ள முரண்பாடுகளைப் பயன் படுத்தி அதனைப் பலவீனப்படுத்தி உடைக்க வேண்டிய அவசியம் ரணிலுக்கும் இருக்கவே இருக்கிறது.

இந்த இருவருக்குமான தேவைகளின் அவசியம், தேசிய அரசு அமைப்பது குறித்து பேசவைக்கவும் கூடும்... அதுவும் சமாதானத்தின் பேரால்...!

# நாடும் நடப்பும்




### புலிகளுக்கு தீர்வையற்ற வாகனங்களை வழங்கியதற்கு

# ஜே.வி.பி எதிர்ப்புக்காட்டுவது மக்களை ஏமாற்றுவதற்கே?

### திஸ்ஸ அத்தநாயக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தீர்வையற்ற வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கியமை பற்றி ஜே.வி.பி.யினர் எதிர்ப்பைக் காண்பிப்பது, நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கே என திஸ்ஸ அத்தநாயக்கா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜே.வி.பி.யின் அமைச்சர்கள் நால்வர் இருந்த அமைச்சரவைக் கூட்டத்தில்தான், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான செயலகத்துக்கு தீர்வையற்ற சொகுசு வாகனங்களை எடுப்பதற்காக அனுமதி வழங்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது, எதிர்ப்பைக் காண்பிக்காத ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளர் தற்போது பொதுக் கூட்டங்களில் அதற்கு எதிராக கருத்துக்களை வெளியிடுவது, நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காகவா? என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தீர்வையின்றி இந்த வாகனங்களை எடுப்பிப்பது தொடர்பாக, அனுமதி வழங்கிய அமைச்சரவைக் குழுவின் தீர்மானம் தொடர்பாக - ஜே.வி.பி. யின் அமைச்சர்களதும், நாடாளுமன்ற உறுப்பினர்களதும் நிலைப்பாடு என்ன என்பதை உடனடியாக நாட்டுமக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தக்கருத்தை கூறிய அவர், அமைச்சரவைக் குழு - ஒற்றுமையாக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளமையால், அது பற்றி குற்றம்சாட்டி வினாக்கள் தொடுப்பதற்கு ஜே.வி.பிக்கு முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

# நெருக்கடி நிலைமைகளை அடுத்து கால்நடைகளை எடுத்துவர தடை

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலிருந்து வியாபார நோக்கில் வெளியிடங்களுக்கு கால்நடைகளை ஏற்றுவதில் பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளதால், கால்நடை வளர்ப்பின் மூலம், தங்கள் வாழ்க்கையை ஓட்டிச் செல்வோர் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் நெடுந்தீவில் இருந்து அனுமதிகள் பெற்று, யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லப்படும்போது, ஊர்காவற்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதும், அதை ஏற்றிச்சென்றவர்களை நீதிமன்ற கட்டளைப் பிரகாரம் சிறையில் வைத்து, பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதும், ஏற்றுமதி நடவடிக்கைக்கு அனுமதி வழங்கிய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டதுடன், அலுவலகத்தில் வைத்து பொலிஸாரால் முறைப்பாடு பெறப்பட்ட காரணங்களாலேயே இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கால் நடைகளை ஏற்றுவதற்கு உதவி அரச அதிபரின் அனுமதியுடன் பொலிஸார், கடற்படையினர் போன்றோரின் அனுமதிகளும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே ஏற்றுமதியாளர்கள் அனுமதிபெற்று இதுவரை காலமும் ஏற்றிவந்தனர்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக, பெருந்தொகையான கால்நடைகள் சந்தைவாய்ப்பின்றி இருந்தபோதும், தற்போதைய சமாதானச் சூழலில் சந்தைவாய்ப்புக் கிடைத்தது. அதற்கான அனுமதியை, பெரும் நிதிச்செலவுசெய்து பெற்றுக்கொண்டு ஏற்றுமதிசெய்துவந்தபோதும், தற்போது இடம்பெற்றுள்ள இந்த நிகழ்வால் கால்நடை வளர்ப்போர் மத்தியில் பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# துமிந்தசில்வா குறித்து முடிவு அடுத்தவாரம்!

(கொழும்பு)

அடுத்தவாரம் இடம்பெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டுக் குழுக்கூட்டத்தில், மேல் மாகாண சபையின் உறுப்பினர் துமிந்தசில்வா பற்றி இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

துமிந்தசில்வா மீது தொடுக்கப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணையை நடத்தி, அதுபற்றிய அறிக்கையை அந்தக் குழுவிடம் சமர்ப்பிப்பதென ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுக்காற்றுக்குழு தீர்மானித்துள்ளது.

ஒழுக்காற்றுக்குழு சமர்ப்பிக்கும் அறிக்கையைக் கவனத்திலெடுத்தே துமிந்தசில்வா பற்றிய இறுதித் தீர்மானம் அடுத்தவாரம் அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# நிர்வாக அலுவலர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உதவி அரச அதிபர் செயலகங்களிலும் உள்ள நிர்வாக சேவையாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

கடந்தவருடம் நடைபெற்ற நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, பயிற்சி பெற்றவர்களின் மூலமே இந்தப் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சுமார் 22 நிர்வாக சேவை வெற்றிடங்கள் நிலவுகின்றது. இருப்பினும், முதற்கட்டமாக ஏழு பேர் நியமிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (சீ)

# பிரிவுபசார விழா

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சேவையாற்றி, வேறு இடங்களுக்கு மாற்றலாகிச் செல்லும் 13 உத்தியோகத்தர்களுக்கு கடந்த வியாழக்கிழமை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் பிரிவுபசாரம் நடத்தப்பட்டது.

13 உத்தியோகத்தர்களில் 11 எழுவினைஞர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்களும் அடங்குவர். மற்றும் இருவர் கிராம அலுவலகர்களாக ஒபபந்த அடிப்படையில் சேவையாற்றி, இளைப்பாறியவராவார்கள் என்பது குறிப்பிடததக்கது. (17)

# இணைப்பு வேலைகள் முடிந்தும் மின்சாரம் வழங்கப்படவில்லை

(தென்மராட்சி)

பளை பிரதேசத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பாரிய மரங்கள் தறிக்கப்பட்டு, மின் கம்பங்கள் நாட்டப்பட்டு, வயர்களும் இழுக்கப்பட்டுவிட்டது. ஆனால், இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதனை அந்தப் பகுதி மக்கள் உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

பொதுக்கட்டுரை

கொ.அ.ஸ்ரனிஸ் லாஸ

# பக்தர்களைக் கரையேற்றும் கப்பலேந்தி மாதா திருவிழா

**முல்லைத்தீவு கரையில் இருந்து புறப்பட்ட கப்பலொன்று யாழ். குடாநாட்டை நோக்கச் செல்கையில, வழியில் கட்டைக்காடு கிராம கடற்பரப்பில் கடும் புயலினுள் சிக்கியது. கப்பலை ஓட்ட முடியாத நிலையில் இருந்த மாலுமிகள் கப்பலின் பாரத்தைக் குறைப்பதற்காக கப்பலில் இருந்த பொருட்களில் ஒரு பகுதி யைக்கடலினுள் வீசினர். அந்த வேளை அவர்களால் எடுத்து வந்த மாதா சுருபமும் கடலினுள் வீசப்பட்டது. சிறிது நேரத்தில் கடும் காற்று ஓய்ந்து கடல் அமைதியானது.**

யாழ்ப்பாணம் மறைமாவட்டத்திலுள்ள கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயம் இன்று வருடாந்த திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறது. இதற்கான சகல ஆயத்த ஒழுங்குகளை தாளையடி பங்குத் தந்தை அருட்திரு ஜே.பிரான்சீஸ் அடிகளாரும், உதவிப் பங்குத்தந்தை அருட்திரு கான்ஸ்பேகமர் அடிகளாரும், ஆலயத்திருப்பணிச் சபையினரும் இணைந்து கடந்த 15 நாட்களாகச் செய்து வருகின்றனர். மறை உரையை அருட்திரு ஜெறோம்லம பேட் (அமதீ) அடிகளார் நவநாள் மறையுரைகளை வழங்கி வருகின்றார்.



1991 ஆம் ஆண்டு இந்தப் பிரதேசத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைக்கு முன்னர், குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் பெருந் தொகையாக திருவிழாவுக்கு வரும் பக்தர்கள், மீளக் குடியமர்ந்த பினனர் சரிபாதியாகக் குறைந்திருந்தாலும், கடந்த இரண்டு ஆண்டுகளாக நடை பெற்றதிரு விழாவில் இந்தப் பிரதேசக் கிராம மக்களும் ஆலயத திருவிழாவில் கலந்து, அன்னையின் அருளாசி வேண்டித் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியுள்ள னர்.

1991ஆம் ஆண்டு ஆடி மாதம் இந்தக் கிராமத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக முற்றாக இடம் பெயர்ந்து, 12 வருடங்களின் பின் தங்கள் கிராமத்துக்குத் திரும்பியவேளை, தமது கோயில் பாடசாலை உட்பட சகல வீடுகளும், பயன்தரும் தென்னை, பனை மரங் களும் முற்றாக அழிக்கப்பட்டு, வனாந் தரமாகக் கிராமம் காட்சியளிப்பதைப் பார்த்து மக்கள் கதறிஅழுதனர்.

இந்தக் கிராம மக்கள் ஊர்ப்பற்றும், சமயப்பற்றும் மிகுந்தவர்கள், நூற்றுக்கு நூறு வீதம் கத்தோலிக்கர்களைக் கொண்ட கிராமம். இடம் பெயர்ந்திருந்த வேளையில் முழு இராணுவக் கடடுப்பாட்டில் இருந்த தமது கிராமத்தின் ஆலயம் முற்றாகச் சேதமடைந்திருந்த நிலையிலும், தமது கப்பலேந்தி மாதாவை வணங்கி அருளாசி பெறவேண்டுமென்ற நோக்கில் ஊருக்குவந்து, இராணுவத்தினரிடம் பிடிபட்டு விசாரணையின் பின் விடுபடடோர்பலர். விடுவிக்கப்படாதோரும் உண்டு.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் 2002ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்த மக்கள் தமக்கென தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கு முன்னர் அனைவரும் ஒன்று சேர்ந்து மாதாவுக்கு 45'x20' நீளத்தில் ஆலயம அமைதது வன்னியில் இருந்த மாதா சுருபத்தை தர்மபுரம் பங்குத்தந்தை அருட்திரு யூட்நிக்ஷன் அடிகளாரின் உதவியுடன் எடுதது வநது, ஆலயத்தில் வைத்து தாளையடி பங்குத்தந்தை அருட்திரு ஸ்ராலின் அடிகளாரும் இணைந்து முதற் திருப்பலியை நிறைவேற்றினார்கள்.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த ஆலயத் தின் சிறப்பை ஆராய்வதற்கு முன் இதன் வரலாற்றினை முன் னோக்கிப்பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

ஐரோப்பாவில் இருந்து இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் தமது வியாபாரத்தினை மையமாகக் கொண்டிருந்தாலும்கூட, கரை யோரங்களில் கத் தோலிக்க தேவாலயங்களை நிறுவி, கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் கப்பல மூலம் முல்லைத்தீவு கரையில் இருந்து புறப்பட்ட கப்பலொன்று யாழ். குடாநாட்டை நோக்கிச் செல்கையில, வழியில் கட்டைக்காடு கிராம கடற்பரப்பில் கடும் புயலினுள் சிக்கியது. கப்பலை ஓட்ட முடியாத நிலையில் இருந்த மாலுமிகள் கப்பலின் பாரத்தைக் குறைப்பதற்காக கப்பலில் இருந்த பொருட்களில் ஒரு பகுதியைக் கடலினுள் வீசினர். அந்த வேளை அவர்களால் எடுத்து வந்த மாதா சுருபமும் கடலினுள் வீசப்பட்டது. சிறிது நேரத்தில் கடும் காற்று ஓய்ந்து கடல் அமைதியானது. மறுநாள் அதிகாலை நங்கூரமிட்டிருந்த கப்பலைத் தொடர்ந்தும் பிரயாணம் செய்ய ஆயத்தமான வேளை, தாம் கப்பலில் கொண்டு வந்த மாதா சுருபம் இல்லாதிருப்பது கண்டு அதிர்ச்சியுற்றனர். பின்னர் கப்பலைக் கரைக்கு அண்மையில் நங்கூரமிட்ட மாலுமிகள் துணைப்படகு மூலம் கரையை அடைந்தனர்.



இந்தவேளை கடலினுள் வீசப்பட்ட மாதா சுருபம் அலைகளினால் அடித்துச் செல்லப்பட்டு கரையொதுங்கியது. அந்தச் சுருபத்தினைக் கிராமத்துக் பெரியவர் ஒருவர் கடற்கரையில் கண்டெடுத்து, அந்த ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்தினார். மக்களும் அந்த இடத்தில் ஒன்று கூடினர். அதேவேளை மாதா சுருபத்தைத் தேடிவந்த மாலுமிகள் சனக் கூட்டத்தைக் கண்டு அங்கு சென்ற வேளை மாதா சுருபத்துடன் மக்கள் குழுமியிருப்பதைக கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

முன்பு நடந்த சம்பவங்களை மக்களுக்குக் கூறிய மாலுமிகள் கிராமவாசிகளுடன் இணைந்து கடற்கரைக்கு அண்மையில் ஓலைக் கொடடகை அமைத்து, அதனுள் மாதா சுருபத்தினை வைத்து வழிபாடு செய்தனர்.

கப்பலைக் கடும்புயலில் இருந்து காப்பாற்றியமையால் மாதாவுக்கு கப்பலேந்தி மாதா எனப் பெயரிட்டனர் அந்த ஊர்மக்கள்.

இந்தச் செய்தி கத்தோலிக்க மறைபரப்புக்குப் பொறுப்பானவருக்குத் தெரியப்படுத்த, அவர்கள் திருச்சொருபத்தைப் பொறுப்பேற்று ரோமாபுரிக்கு அனுப்பிவைத்தார்கள். சிறிது காலத்தின் பின்னர் கையளிக்கப்பட்ட மாதா சுருபம் நிலையாக அமைக்கப்பட்ட சிற்றாலயத்தில் வைக்கப்பட்டு, அந்த ஊர்மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வந்தது.

காலப்போக்கில் கிராமத்தைச் சேர்ந்தவர்களின் தொகை அதிகரிக்க அன்னையின் அருள்வேண்டி வந்த பக்தர்களின் தொகையும் அதிகரித்தது.

இந்த ஆலயம் 1905 ஆம் ஆண்டளவில் சுண்ணாம்புக் கற்கள் கொண்ட ஆலயமாகக்கட்டி முடிக்கப்பட்டது. அந்த நாட்களில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மேலைத்தேய குருக்களின் சிபார்சின் பேரில் இலங்கை மேற்றாசனத்தின் கீழ்பங்கு ஆலயமாகப் பதிவு செய்யப்பட்டது.

இந்த ஆலயம் 1956 ஆம் ஆண்டு மேலும் 20 அடி நீட்டிக்கட்டப்பட்டதுடன், திருத்த வேலைகளும் செய்யப்பட்டது. 1960ஆம் ஆண்டு கோயில் முகப்பும் 1980ஆம் ஆண்டு ஆலயத்தின் முன் மண்டபமும் கட்டப்பட்டது. இந்த ஆலயத்தின் திருவிழா ஆவணி மாதம் 1ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஆவணி 15 ஆம் திகதி திருநாட் திருப்பலியுடன் முடிவடையும்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

# பிதிர் வழிபாட்டுக்கு உகந்த ஆடி அமாவாசை விரதநாள்

சூரிய சந்திரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசையாகும். அத்துடன் தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாக உள்ளனர். பூமியிலுள்ளவர்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு அமாவாசையும் பிதிர்கருமத்துக்கு அதாவது, தென்புலத்தார் வழிபாட்டுக்கு மிக உவந்த நாள். சூரிய மண்டலத்துக்கு அப்பால் தென் மண்டலத்தில் பிதிர்கள் உறையும் பிதிர் லோகம் உள்ளது. பிதிர்களைத் தென்புலத்தார் என்று அழைப்பது தமிழர்கள் மரபு. தென்புலத்தார் வழிபாடு எள்ளும் தண்ணீரும் இறைதல், பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. அமாவாசையில் விரதம் இருந்து இந்தக் கருமங்களை ஆற்றவேண்டும்.

ஆடி அமாவாசை பிதிர்க்கருமங்களுக்கு மிகவும் உகந்தது என்றும், பிதிர் வழிபாடு செய்ய வேண்டியவர்கள் தவறாது ஆடி அமாவாசை செய்ய வேண்டும் என்றும் நூல்கள் எடுத்துரைக்கின்றன. பிதிர்த்தர்ப்பணத்துக்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் கொள்கை.

ஆடி அமாவாசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழைய வினைகள் அறும் என்றும், பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின அருள் செறிந்த நீராக நினைந்து முன்னோர்களான பிதிர்களை எண்ணி, அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும்படி இறைவனை வேண்டி தீர்த்தமாடுதல் வேண்டும்.

அமாவாசை, பௌர்ணமித் தினங்களில் கடல் பொங்கியெழும் நிலை உணடு. இவ்வாறே இந்தத் தினங்களில் மனித மன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகிறது. மானிடரின் ஆத்மீக வலுவும் குன்றும் காலமாக இந்தத் தினங்கள் உள்ளன. எனவேதான், அமாவாசை போன்ற கனத்த நாட்கள் மிக அவதானமாகக் கழிக்கப்பட வேண்டும் என்றும் இந்த நாட்களில் வேறு காரியங்களைச் செய்யாதும், மனங்களைப் புலன்கள் வழிச்செல்ல விடாதும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறிவைத்தனர். இந்தத் தினங்களில் கடவுள் வழிபாடு, பிதிர் வழிபாடு என்பவற்றைச் செய்து நல்ல பயனைப் பெறுவதே முறையாகும்.

ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல், பிதிர் வழிபாடுசெய்தல், தர்ப்பணம், பிண்டதானம் நிறை வேற்றுதல் என்பவை ஆண்டு தோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங் கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வேறும் பல சிவதலங்களிலும் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. நாங்கள் நோயின்றிச் சுகமாக வாழவும், சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும், தெய்வங்களை ஆராதிக்கிறோம். இதற்குப் பிதிர்களையும், திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும். இவற்றுக்குரிய விதிமுறைகளையெல்லாம் நமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர். பராசர், மனு, விதுர், சாதாதபர் போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் யாவும் சேர்த்து "தர்ம சாஸ்திர நிபந்தனம்" எனும் சிறந்த நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

தட்சணாயனத் தொடக்க மாதம் ஆடி என்பதால் பிதிர்க் காரியங்களுக்கு ஆடி மாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படுகிறது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதிர் வழிபாட்டுக்குப் புண்ணியமான தினம் எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இத்தகு புண்ணிய காலமாக இன்று இந்துக்களால் தமிழீழப் பிரதேச மெங்கும் பிதிர்கடன் நிறைவேற்றி, ஆடி அமாவாசை விரதம் நிறைவேற்றப் படுகின்றது.

வட புலத்திலே ஈழத்தமிழர்களின் பூர்வீக வரலாற்றுப் பெருமைகளைத் தன்ன கத்தே கொண்டு விளங்கும் ஈஸ்வரங்களிலொன்றான நகுலேஸ் வரத்தில் (கீரிமலைச் சிவன் கோயில்) கீரிமலை என்னும் புனித கங்கையில் பல்லாயிரக் கணக்கான இந்துக்கள் இன்று பிதிர்த்தர்ப்பணம் செய்து கொள்வர்.



## பாலியல் வல்லுறவின் பின்
# மாணவியை படுகொலை செய்தவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது!

## கொல்கத்தாவில் சம்பவம்



(கொல்கத்தா)

கொல்கத்தாவில் கடந்த 1990ஆம் ஆண்டு பள்ளி மாணவி ஹேரதல் பரேக் பாலியல் வல்லுறவு புரிந்து கொலை செய்யப்பட்டார்.

மாணவி வசித்து வந்த அடுக்கு மாடி குடியிருப்பில் காவலாளியாக இருந்த தனஞ்செய், இந்தக் கொடூரத்தை செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸார் அவரைக் கைது செய்து அலிப்பூர் சிறையில அடைத்தனர்.

மாணவி பரேக் உடலில் பதிந்த நகக்கீறல்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் தனஞ்செய் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால், 1991ஆம் ஆண்டு அவருக்கு அலிப்பூர் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. கொல்கத்தா மேல்நீதிமன்றம் மற்றும் டெல்கி உயர் நீதிமன்றம் இதை உறுதி செய்தன.

இதையடுத்து, 1994ஆம் ஆண்டு ஜனாதிபதிக்கு கருணை மனு கொடுக்கப்பட்டது. ஆனால், அப்போதைய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா அதை நிராகரித்தார். என்றாலும் மேற்குவங்க மேல் நீதிமன்ற உத்தரவு காரணமாக அந்தச் சமயத்தில் தனஞ்செய் உயிர் தப்பினார்.

10 ஆண்டுகளுக்குப் பிறகு சமீபத்தில் தனஞ்செய் வழகது மீதான தடையை கொல்கத்தா மேல் நீதிமன்றம் நீக்கியது. இதையடுத்து கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி தனஞ்செய்யை தூக்கில் போட மேற்குவங்க அரசு ஏற்பாடு செய்தது.

தனஞ்செய் உயிரைக் காப்பாற்ற அவர் குடும்பத்தினர் மீண்டும் அடுத்தடுத்த முயற்சிகளில் ஈடுபட்டனர். 2ஆவது முறையாக ஜனாதிபதியிடம் கருணை மனு கொடுக்கப்பட்டது. ஆனால், இந்தத் தடவை தனஞ்செய்க்காக எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

மேலும் தற்போதைய ஜனாதிபதி அப்துல் கலாம் கடந்த 3ஆம் திகதி கருணை மனுவை நிராகரித்த பிறகும், உயர்நீதிமன்றிலும் கொல்கத்தா மேல் நீதிமன்றிலும் பொது நலவழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவை தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனஞ்செய் தூக்கிலிடப்படுவது உறுதியானது.

அவரை நேற்று தூக்கில் போட ஏற்கனவே மேற்குவங்க அரசு ஏற்பாடுகள் செய்திருந்தது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் தனஞ்செய்யை பொலிஸார் எழுப்பி தூக்குத்தண்டனை ஏற்கத் தயாராக இருக்கும்படி தெரிவித்தனர்.

இதனையடுத்து தனஞ்செய் காலை கடன்களை முடித்து குளித்துத் தயாரானார். அவருக்கு நேற்று 42ஆவது பிறந்த நாளாகும்.

பின்னர் அவர் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு நேற்று அதிகாலை 4.55 மணிக்கு தனஞ்செய் தூக்கில் போடப்பட்டார்.

# நடிகர் விக்ரமுக்கு தேசிய விருது




இந்த ஆண்டுக்கான சிறந்த நடிகர் விருது நடிகர் விக்ரமுக்கு (படம் - பிதாமகன்) கிடைத்திருக்கிறது. பாலா டைரக்ட் செய்த பிதாமகன் படத்தல் விக்ரம் சுடுகாட்டை காவல் காக்கும் வெட்டியானாக நடித்து இருந்தார்.

படம் முழுவதும் வசனம் பேசாமல் உணர்ச்சிபூர்வமாக நடித்து இருந்தார். விக்ரமுக்கு ஜனாதிபதி அப்துல் கலாம் சிறந்த நடிகருக்கான விருதை வழங்குவார்.

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## உலக நோக்கு

# அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் ஷியா தலைவர் சதார் காயமடைந்தார்



ஈராக்கின் நஜாவ் நகரில் அமெரிக்க கூட்டணிப் படைகளுக்கெதிராகப் போர்புரிந்து வரும் ஷியா முஸ்லிம்களின் தலைவரான அல்சதார் நேற்றுமுன்தினம் நடந்த மோதலில் காயமடைந்ததாக அவரது உதவியாளர்கள் தெரிவித்தனர்.

சதாரின் உடலில் மூன்று வெவ்வேறு இடங்களில் காயமேற்பட்டுள்ளதாகவும், ஆனாலும், அவர் உடற் தகுதியுடன் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வியாழன் இரவு நடைபெற்ற மோதலில் சதார் காயமடைந்தார் என்ற செய்தியை ஈராக்கின் உள்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்பன மறுத்துள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர்களை நகரிலிருந்து வெளியே கொண்டு வருவதற்காக இரு தரப்பினருக்குமிடையே தற்காலிக யுத்த நிறுத்தத்துக்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக நஜாவ்விலுள்ள பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக் மற்றும் அமெரிக்கப்படைகளுடன் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தை உடன்பாடு எட்டுமளவிற்குப் போகவில்லையெனவும், ஆனாலும், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் சதாரின் பேச்சாளர் தெரிவித்தார்.

சதாமும் அவரது ஆதரவுப் படையினரும் நஜாவின் புனித நகருக்குள் அமெரிக்க மற்றும் ஈராக் படைகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

தான் இறந்தாலும், அமெரிக்கப் படைகளுக்கெதிரான தாக்குதல்களை தொடருமாறு சதார் தனது ஆதரவாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்கப் படையினரின் ஷெல் தாக்குதல்களிலேயே சதார் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சதாரின் உதவியாளர்கள் கண்ணீருடன் சதார் காயமடைந்த தகவலைத் தெரிவித்தனர். சதார் காயமடைந்திருந்தாலும், அவரது உயிருக்குப பாதிப்பில்லையென அவரது பேச்சாளர் தெரிவித்தார்.

உறுதிப்படுத்தப்படாத செய்திகளின்படி சதாரின் மார்பு, கால் மற்றும் முழங்கை என்பவற்றில் காயமடைந்துள்ளதாக அராபிய தொலைக்காட்சி தெரிவித்தது.

சதார் காயமடைந்த தகவல் வெளிவந்த ஒருமணி நேரத்துக்குப் பின்னர் ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி தெரிவிக்கையில் - அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளுக்கெதிராகப் போராடும் அனைத்து கிளர்ச்சியாளர்களும் தமது ஆயுதங்களைக் கைவிட வேண்டுமெனவும், நஜாவ் நகரிலுள்ள புனித தலமான இமாம் அல் - பள்ளிவாசலிலிருந்து வெளியேற வேண்டுமெனவும் தெரிவித்தார்.

## ஈராக் சமரா நகர் மீது
# அமெரிக்கப் படையினர் விமானத் தாக்குதல்

ஈராக்கில் சனி முஸ்லிம்கள் செறிந்து வாழும் சமரா நகரத்தின் மீது அமெரிக்கக் குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதுடன், நாற்பதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்கக் குண்டுவீச்சு விமானங்கள் சமரா நகரத்தின் மீது 230 கிலோ கிராம் எடையுள்ள குண்டுகளை வீசியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று இடம்பெற்ற இந்தத் தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் இந்தத் தாக்குதலானது தீவிரவாதிகளை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டதாகவும் இந்தத் தாக்குதலில் 50இற்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்கக் குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதலில் பொதுமக்களுக்குச் சொந்தமான வீடுகளும், கட்டடங்களும் அழிக்கப்பட்டதாகச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

இதேசமயம், ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஹில்லா நகரத்தில் உள்ள சதார் ஆதரவுப் படைகள் மீது நடத்தப்பட்ட தாக்கு



தலில் 50பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களுள் சதார் ஆதரவுப்படையினர், பொலிஸார் மற்றும் பொதுமக்களும் உள்ளடங்குவதாக ஹில்லா நகர வைத்தியசாலைச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஈராக்கிய பொலிஸ் அதிகாரி ஒருவர் ஹில்லா நகரத்தில் உள்ள இரு பொலிஸ் நிலையங்களைத் தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகவும், இந்தப் பகுதியைப் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளதாகவும், தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ள கட்டடங்களில் இருந்து அவர்கள் விரட்டியடிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.


யாழ்.நகரில் புதிய உதயம்

K.K.போன் சேவிஸ்





இல.1, நவீன சந்தை மேல்மாடி,
மக்கள் வங்கிக்கிளைக்கு அருகில்,
யாழ்ப்பாணம்

அனைத்துப் போன் வகைகளும்
SIM காட், Kit காட் மற்றும்
உதிரிப்பாகங்களை மலிவாகவும்,
தரமாகவும் பெற்றுக்கொள்வதோடு
போன் பழுது, லொக்
உடைத்தல், போன்றவற்றை
துரித கதியில் பெற்றுக்கொள்ளவும்

உத்தரவாதத்துடன் பற்றுகளை பெறவும் நாடுங்கள்:

K.K.போன் சேவிஸ்

யாழ்.வணிகர் கழகம் நடாத்தும்

மாபெரும் யாழ் வர்த்தகக் கண்காட்சி 2004

ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ்.மத்தியகல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்கு பற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(சி-2937)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நோர்வேயின் பிரதமருடன் மஹிந்த ராஜபக்ஷ சந்திப்பு

## ஏதென்ஸ் நகரில் நடைபெற்றது

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நோர்வேப் பிரதமர் பொன்டவிக்கை ஏதென்ஸ் நகரில் நேற்றுச் சந்தித் துப் பேச்சு நடத்தினார்.

ஒலிம்பிக் தொடக்கவிழாவில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்த போதே இவர்கள் இருவரும் ஏதென்ஸ் நகரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இலங்கையின் அரசியல், பொரு ளாதார நிலைமை, சமாதான முயற்சி களின் தற்போதைய நிலைமை ஆகிய விடயங்கள் உட்பட பல் வேறு விடயங்கள் குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாடிய தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியும், அரசும், தானும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண் பதில் முற்று முழுதாக உறுதிப்பாட் டுடன் இருப்பதாகவும் இந்த விட யத்தில் நோர்வேயின் முயற்சிக்கு தாங்கள் கடமைப்பட்டிருப்பதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப் பிட்டார்.

அரசும், புலிகளும் பேச்சுவார்த் தைகளை மீண்டும் தொடங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர், இலங்கையிலுள்ள அனை வரும், அனைத்துலக சமுதாயமும் சமாதான முயற்சிகளுக்கான சரி யான சூழ்நிலையை ஏற்படுத்துவ தற்கு உதவ வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் சமா தான முயற்சிகளில் உறுதியாக இருப்பதாகவும், பேச்சுவார்த்தை களை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்க உறுதியாக இருப்பதாகவும் நோர்வேயின் பிரதமர் பொண்டவிக் தெரிவித்தார்.

கடந்த 16 மாதங்களாக தடைப் பட்டிருந்த பேச்சுவார்த்தைகள் விரை வில் ஆரம்பிக்கும் என்றும் நம்பு வதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஒலிம்பிக் பதக்க விபரம்

ATHENS 2004

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 2 | - | 1 | 3 |
| இத்தாலி | 2 | - | - | 2 |
| ஜப்பான் | 2 | - | - | 2 |
| அமெரிக்கா | 1 | 2 | 1 | 4 |
| அவுஸ்ரேலியா | 1 | 1 | - | 2 |
| உக்ரேன் | 1 | - | 1 | 2 |
| ரஷ்யா, | - | 2 | 1 | 3 |
| ஹங்கேரி | - | 1 | 1 | 2 |
| பிரான்ஸ் | - | 1 | - | 1 |
| ஜோர்ஜியா | - | 1 | - | 1 |
| போர்த்துக்கல் | - | 1 | - | 1 |
| ஆர்ஜன்ரீனா | - | - | 1 | 1 |
| பெல்ஜியம் | - | - | 1 | 1 |
| செக் குடியரசு | - | - | 1 | 1 |
| ஜேர்மனி | - | - | 1 | 1 |
| கொரியக் குடியரசு | - | - | 1 | 1 |
| மொங்கோலியா | - | - | 1 | 1 |

# நீதிமன்றுக்கு அருகில் வைத்து மூவர் நேற்று சுட்டுக்கொலை!

## பலப்பிட்டியவில் சம்பவம்!

(கொழும்பு)

பலப்பிட்டிய நீதிமன்றத்திற்கு அருகில் நேற்றுக்காலை மூன்று பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட மூவரும் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள பாதையின் அருகே நின்றுகொண்டி ருந்தபோது கார் ஒன்றில் அந்த இடத துக்கு வந்த ஆயுதம் தாங்கிய குழு வினர், இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிய வருகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் கான இடத்திலேயே ஒருவர் உயிரி ழந்ததாகவும் மற்றைய இருவர் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் ஒருவர் பெண் எனவும் இது தொடர் பாக விசாரணை நடைபெற்று வருவ தாகவும் அம்பலாங்கொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.எஸ்.சி. ஹெல்லெபொல தெரிவித்தார். (01)

## வன்னியின்..

இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரி விக்கையில் -

இலங்கையில் வேறு எந்தப் பகுதிக்கும் அடிக்கடி செல்வதில்லை. இங்குதான் பல தடவை பயணம் மேற்கொண்டுள்ளேன். மீள் குடி யேறிய இப்பகுதி மக்களின் மேம் பாட்டுக்கு ஜப்பானிய அரசு உதவி களைச் செய்யும்.

மக்கள் தமக்கிடையிலான பேதங் களை மறந்து ஒற்றுமையுடன் பிரச் சினையைத் தீர்க்கவேண்டும் என் றும் குறிப்பிட்டார்.

## நோர்வேயின்...

எவ்வாறு மீள ஆரம்பிப்பது என்பதற் காக எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் தற் போதைய நிலை தொடர்பாகவும் ஆரா யப்பட்டது. இது தொடர்பாக கருத் துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 1.8 சரத்துப்படி ஆயுதக்குழுக்களை கட் டுப்படுத்துவது என்பது குறிப்பிடப்பட் டுள்ளதாகத் தெரிவித்தார்.

இவற்றைக் கேட்டறிந்த பிரதித் தூதுவர் இது தொடர்பாக தான் அரசாங்கத்துக்கு தெரிவிப்பதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சிநிரலை எடுத்துவருவதற்கான முயற்சிகள் செய்வதாகவும் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதி...

இந்த அழுத்தம் காரணமாகவே, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா முன்வந்துள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# கொக்கோ கோலா விற்பனையை சுகாதார சேவை இடை நிறுத்தம்

ஒன்றரை லீற்றர் கொள்ளளவுள்ள கொக்கோகோலா பானத்தின் விற்பனை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவை அறிவித்துள்ளது.

இது குறித்துத் தமிழீழ சுகாதார சேவையினர் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் விநியோகிக்கப்பட்டு வரும் ஒன்றரை லீற்றர் கொக்கோ கோலா மென்பான போத்தல், போலி நிறுவன வியாபாரக் குறியீடு கள் பொறிக்கப்பட்டு, வெண்ணிற மூடியால் அடைக்கப்பட்ட- போலியாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதை தமிழீழ சுகாதார சேவை இனங்கண்டுள்ளது.

எனவே, வர்த்தகர்கள் இவற்றை கொள்வனவு செய்யவோ, விற்பனை செய்யவோ வேண்டாமென அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமாதானப் பேச்சு...

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்ப தில் உறுதியாகவேயுள்ளனர். இதில் எந்தவித மாற்றமுமில்லை. நாம் இடைக்கால நிர்வாக சபை தொடர் பான திட்டவரைபை அனுசரணையா ளர்களிடம் கையளிக்கும்போதே, இதனடிப்படையிலேயே பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்பட வேண்டுமென தெளிவாகத் தெரிவித்திருந்தோம். எனத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் ஜப்பானின் திட்டங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல் வன் -

வடக்கு - கிழக்கில் ஜப்பான் நிதியுதவிகளை வழங்கி திட் டங்களைச் செயற்படுத்தும்போது, அது மற்றய சர்வதேச நிறுவனங் களைப்போல் உள்ளூர் மக்கள் மற் றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறு வனங்கள் போன்றவற்றையும் தமது திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே மக்களும் அந்த திட்டங்கள் ஊடாக நன்மைகளைப் பெறமுடி யும்.

அத்துடன் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஜப்பான் தொழில் பயிற்சி மையங்களை நிறுவி இளை ஞர், யுவதிகளுக்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம், அவர்களுக் கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி அவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக உருவாக்க முடியு மெனவும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் மாற்றுத் திட்டம்....

அந்த வரைபை மிகுந்த ஈடு பாட்டோடும், எங்களுடைய மக்க ளின் முழு ஆதரவோடும், பங்களிப் போடும், சர்வதேச நிபுணர்களின் ஒத்துழைப்போடு, உருவாக்கி எங் கள் தலைமைப்பீடம் சமர்ப்பித்திருக் கிறது.

இது சமர்ப்பித்தது மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக தமிழர் தாயகத் தில் வாழ்கின்ற எமது மக்களின் பெரும்பான்மையான ஆதரவையும் துணையாகப் பெற்றிருக்கிறோம்.

கடந்த தேர்தலில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஏற்றுக் கொண்டு மக்களும் ஒரு ஆணை வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் நாங்கள் செயற் படுகின்றோம். இலங்கை அரசாங்கம் முன்வைக்கப்போகின்ற திட்டங் களை வைத்துக்கொண்டு நாங்கள் பேசுவது கஷ்டமாக இருக்கும்.

கடந்த காலங்களில் எதுவுமே வெற்றியளிக்காத கட்டத்தில்தான் புலிகள் இந்த முயற்சியை எடுத் திருக்கின்றனர். விடுதலைப் புலி களின் இந்த முயற்சியை சர்வதேச சமூகமும் பல தடவை ஆதரித்து அங்கீகரித்திருக்கின்றது. இந்த அடிப் படையில் பேச்சுக்களைத் தொடர்வ தற்கு நாங்கள் எப்பொழுதும் ஆயத்த மாக இருக்கிறோம்.

எப்பொழுதுமே நேருக்கு நேரே நேரடியாகப் பேச்சுக்களை முன் வைப்பதுதான் இடர்பாடுகளைக் குறைப்பதற்கான ஒரு சரியான வழி முறையாக இருக்கும் அதை நாங் களும் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் இந்த வழிமுறையைக் கொண்டுவருவதற்கு இலங்கை அர சாங்கம்தான் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டும்.

விடுதலைப் புலிகள் தங்களு டைய நிலைப்பாடுகளைத் தெளி வாக்கியிருக்கின்றார்கள். விடு தலைப் புலிகள் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு எப்போதும் ஆயத் தமாக இருக்கின்றார்கள். நோர்வே வெளிவிவகார அமைச்சர் சந்தித்த போது, எமது தலைவர் இந்த விருப் பத்தைத் தெளிவாக வெளிப்படுத்தி யிருக்கிறார். இலங்கை அரசாங்கத் தின் கையிற்தான் அது தங்கியி ருக்கின்றது.

எங்களைப் பொறுத்தவரையும் நாங்கள் சமாதான வழியில் பேச்சுக் களுக்கூடாக எங்கள் மக்களின் அபிலா ஷையை அடிப்படையாகக் கொண்டு அதற்கான ஒரு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் அர்ப்பணிப்போடு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத் தத்தைத் தொடங்கி இந்தப் பேச்சு வார்த்தைகளுக்குரிய சூழலை உரு வாக்கியதில் முக்கியபங்கு எமது தலைவரைச் சார்ந்தது.

சர்வதேச சமூகத்துக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை மீதுள்ள நிலைப்பாட்டிலும் திருப்தி ஏற்பட்டுள்ளது. அவர்கள் நல்ல ஆத ரவையும், ஒத்துழைப்பையும் எங்க ளுக்குத் தந்துகொண்டிருக்கின்றார் கள்.

அத்தகைய சர்வதேச சமூகத் தின் ஆதரவையும், அவர்களின் கரிசனையையும் குழப்புகின்ற நோக் கோடுதான் உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை வெளியிட்டுச் சீர்கு லைக்க முயல்கின்றார்கள்.

இன்று காலை நோர்வேயின் பிரதித் தூதுவர் எங்களை அவசர மாகச் சந்தித்திருக்கின்றார். இந்தச் சந்திப்பின்போது அவரிடம் எங்க ளின் நிலைப்பாடுகளை மிகத் தெளி வாக நாங்கள் தெளிவுபடுத்தியி ருக்கிறோம்.

அரசாங்கத்தின் புதிய யோச னைகள் அழுத்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் இருந்தாலும் அது எங்க ளுடைய மக்களால் ஏற்றுக்கொள்ளப படக்கூடியதல்ல. ஏனெனில் பாதிக் கப்பட்ட மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு - யுத்தத்திற்கு முகம் கொடுத்த மக்களும், வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்குத்தான் ஒரு தீர்வு வேண்டும்.

தமிழ் மக்களுடைய அபிலாஷை களுக்கு அமையவே தீர்வு அமைய வேண்டும். ஆகவே சிங்கள மக்களி டம் தீர்ப்பைக் கேட்டு, தீர்வை முன் வைப்பதன் மூலம் அது ஒருபோதும் நடைபெறவியலாத காரியமாகும்.

அந்த நிலையில்தான் தமிழர் தரப்பு ஒரு ஆக்கபூர்வமான ஒரு ஆலோசனையை முன்வைத்துள் ளது. அந்த ஆலோசனையின் அடிப் படையில் பாதிக்கப்பட்டவர்கள், தீர்வு வேண்டி நிற்பவர்கள் என்ற வகை யில் தமிழர் தரப்பின் ஆலோச னையின் அடிப்படையில் பேசலா மேயொழிய, சிங்கள அரசாங்கங்க ளால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற நிலைப்பாடுகளில் இருந்து தமிழ் மக்கள் பேசுவதென்பது சாத்திய மில்லாத ஒன்று. ஆகவே, சர்வ தேச சமூகத்துக்கும் இது தெளி வாக விளங்கியிருக்கும் என்று நம்பு கிறேன்.

திருகோணமலையில் விடுத லைப் புலிகள் முகாம் அமைத்துள் ளார்கள் என்று பரபரப்பாகப் பேசப் படுவதும் அவ்வப்போது, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப புலிகள் மீது தவ றான அபிப்பிராயங்களை ஏற்படுத்து வதற்கு ஒரு பூச்சாண்டியாகத்தான் இதைப்பார்க்கின்றோம்.

திருகோணமலையைச் சுற்றி வளைக்கின்றார்கள், திருகோண மலையில் புதிய முகாம்களை அமைக்கிறார்கள். இதுவெல்லாம் இன்று நேற்று வருகின்ற அவர்களு டைய கருத்தல்ல. யுத்த நிறுத்த உடன்படிக்கை வந்த காலத்தில் இருந்து அவ்வப்போது அவர்களால் கிளப்பப்படுகின்ற ஒரு தவறான பிரசாரமாகத்தான் நாங்கள் அதைப் பார்க்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் நாங்கள் ஒரு இறுக்கமான போக் கைக் கடைப்பிடிக்கின்றோம். எங்க ளுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசங்க ளில் ஏற்கனவே இருந்த மக்கள் நிலையாக இருக்கின்றார்கள்.

அங்கே அரசியற் பணிக்காக நடமாடுகின்ற போராளிகள் எல்லாம், இராணுவ நிலையாக அவர்களு டைய கண்களுக்குத் தெரிவதன் அர்த்தம் எங்களுக்குப் புரியாமல் இருக்கிறது.

இது நிச்சயமாக ஒரு சமாதானச் சூழ்நிலையைச் சீர்குலைக்கும் நோக் கோடு முக்கியமாகச் சர்வதேச சமூ கம் இன்றைக்கு விடுதலைப் புலி கள் மீதும், தமிழர் தரப்பினரின் நிலைப்பாட்டின் மீதும் அவர்கள் கொண்டிருக்கின்ற நல்லெண்ண நம்பிக்கையைச் சீர்குலைக்கும் நோக கோடு தவறாகக் கட்டவிழ்த்து விடப் படுகின்ற தவறான பிரசார நடவடிக் கையாகத்தான் இதை நாங்கள் கருதுகின்றோம்.

அரசாங்கம் ஒரு மாற்று யோச னையை முன்வைத்தால் நிராகரிக் கப்படும். அது பேச்சு மேசைக்குச் செல்வதற்கான வாய்ப்பைத் தடுக் கின்ற ஒரு நடவடிக்கையாகத் தான் நாங்கள் அதைப் பார்க்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட இடைக்காலத் தன் னாட்சி அதிகாரசபை, தமிழ் மக்க ளுடைய ஆணையின் அடிப்படை யிலும், தமிழ் மக்களுடைய முழு ஆதரவோடும், பங்களிப்போடும் தமிழ் மக்களின் ஒரு ஆலோசனை வரைபாக முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிற்தான் எந்த அர சாங்கமும் பேச்சுக்கு முன்வருவது சாத்தியப்பாடாக இருக்கும் என்பது தான் எங்களின் நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்தார்.

நாளை ஆரம்பம்
A/L - 2005
DAY CLASS
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
காலை 8.30
DMI
யாழ்நகர்
(சீ/2938)

## மட்டக்களப்பில்...

அடையாளம் காணப்படாத இந் தச் சடலம் கண்கள் மற்றும் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில், வாழைச்சேனை பிரதான பஸ்நிலை யத்துக்கும் துறைமுகத்துக்கும் இடையேயான பிரதான வீதியில் காணப்பட்டது.

இந்தச் சடலம் அடையாளம் காண்பதற்காக பொலிஸாரால் வாழைச்சேனை மாவட்ட வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

கொல்லப்பட்டவர் சுமார் 30 வய்து மதிக்கத்தக்கவர் எனத் தெரிவித்த வாழைச்சேனை பொலி ஸார், இந்தச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருவ தாகவும் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.